சித்தன்

15 APR 1935

ஆசிரிய

மாதப்பத்திரிகை.

பழனி.

தேசாபிமானம்

ஒருக! தாது!

லெதி-லைரஸா

பனித சக்தி!

சாரதா சட்டம்

முதலியன.

முழு விபரம்

அட்டவணையில் காண்க.

JL
1211, 1135C14
136.2.4
18930.

...ப்ரல் 36. ... ...னி 4.

உள்ளுரை.

பக்கம்.

1.	தேசாபிமானம்	155
2.	ஜார்ஜ் மன்னர்மீது இரங்கற்பா	158
3.	வருக! தாயே!	160
4.	ஸதி-ஸரஸா	163
5.	அன்னையின் முறையீடு ...	169
6.	சினிமா பகுதி	171
7.	மனித சக்தி!	173
8.	தெலுங்குமொழிப் புலவர் ...	179
9.	சாரதா சட்டம்	183
10.	வைதவ்யச் சிந்தா	187
11.	குணவாகடம்	188
12	மருந்துசெய் பகுதி	192
13.	மூலிகைப் பகுதி	194
14.	நாகானந்தன்	195
15.	செய்தித் திரட்டு	202

சந்தா விபரம்.

வருடம் 1-க்கு உள் நாடு ...	ரூ.	0—8—0.
,, வெளி நாடு ...	ரூ.	1—0—0.
தனிப்பிரதி ...	ரூ.	0—0—9.
ஜீவிய சந்தா	ரூ.	10—0—0.

விளம்பர விகிதம்.

ஒரு தடவைக்கு முழுப்பக்கம்	ரூ.	5—0—0.
,, அரைப்பக்கம்	ரூ.	3—0—0.
,, கால்பக்கம்	ரூ.	1—8—0.

விலாசம்:— மனேஜர்,
சித்தன்,
பழனி. S. I

"சித்தன்"

ஓர் உயரிய மாதப் பத்திரிகை.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

ஆசிரியர்— C. P. சாமி.

மாலை 2.	பழனி, ஏப்ரல் 1936.	மணி 4.

தேசாபிமானம்.

தேசாபிமானமாவது தேசபக்தி அல்லது தேசத்தில் அன்புவைத்தல் அல்லது தன் சொந்த நாட்டில் அபிமானங் கொண்டிருத்தல் என்பதாம். இவ்வபிமானம் சாதாரணமாய் யாவரிடத்திலும் அமைவது இயற்கையே. ஆனால் அந்தோ இப்பாழும் இந்தியநாட்டில் இதற்கு மாறான சுபாவமுடையவர்கள் இருப்பதைப்பற்றி என்னென்று கூறுவது? 'தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்' என்றபடி இவர்கள் பிறந்தது முதல் ஜாதிப்பூசல், சமூகவேற்றுமை, மதவேறுபாடு, நிறவேற்றுமை, உயர்வு தாழ்வு, மூடப்பழக்கவழக்கங்கள் முதலிய கொடுமைகட்களாகிய தின்பயனால் கேவலம், அடிமைகளாய், கோழைகளாய் உழல்வதாலோ அல்லது அறியாமையாலோ இவ்விதம் தாய்நாட்டை மறந்து நிற்கின்றனர்.

பறந்துசெல்லும் காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற வாஞ்சையிருக்குமானால் ஆறறிவினையுடையோராய நாம் எவ்வளவு தூரம் தேசாபிமானம் பாஷாபிமானம் உடையவர்களாய் வாழவேண்டுமென்பதை ஒவ்வொருவரும் யோசிக்கவேண்டும்.

சொந்த நாடென்பது தான் பிறந்த நாடாயிருக்கவேண்டுமென்பதல்ல. தனது பெற்றோரும், உற்றோரும் வாழ்ந்து வரும் அதாவது, தனது நாட்டார் தொன்றுதொட்டு வாழும் தேசமே தனது சொந்த நாடாகும். ஆங்கிலேயருக்கு இந்தியா ஒருபோதும் தாய்நாடாகமாட்டாது. உலகத்தில் எந்தக்கோடியில் அவர்கள் வசித்தாலும் இங்கிலாந்தை மறவாமல் தமது கடமைகளை அத்தேயத்தை முன்னிட்டே செய்துகொண்டு போவார்கள். இதை அறியாதார் யார்?

> "கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும்
> கொண்டானை அல்லால் மற்றறியாக் குலமகள்" என்றபடி.

எத்தகைய கஷ்டத்திலும், எத்தகைய நிலைமையிலும், எத்தகைய வாழ்க்கையிலும், பிறதேசத்தை மறந்து தன் சொந்த நாட்டை முதன்மையாய் கவனிப்பவனே மனிதப்பிறவியாவானென்பதே நமது மாபெரும் தலைவர்களின் துணிபு. அதற்கேற்ப நமது உலக சிரேஷ்டர் மகாத்மா காந்தியடிகளின் கொள்கையும் இந்நாவலன் தீவுக்கு "என் கடன் பணிசெய்து கிடப்பதே". என்பதல்லவா?

எனவே, இந்தியர்களால் நாம் நமது உற்பத்திக்குக் காரணமாகிய பாரதநாட்டையும் அதன் கைத்தொழில், வியாபாரம், விவசாயம் வைத்தியம் முதலியவற்றையும் ஆதரிக்க வேண்டுவது நமது கடமையாம். அதோடு மதாசார சமூக பழக்கவழக்கங்களிலும் தீயன போக்கி, நல்லவை ஓர்ந்து செய்யின் அதுவுந்தேசசேவையேயாகும். மேலும் காலதேச வர்த்தமானங்கருதி ஆண்மக்களைப்போலவே பெண்மக்களும் பணிபுரிதல் அத்யாவசியமாகும். கூடியவரை விதேசி சாமான்களை விஷம்போல் விலக்கி சுதேசிப் பண்டங்களை உபயோகிக்கவேண்டும். இதனால் அயல்நாட்டுப்பொருளை முற்றிலும் பஹிஷ்கரிக்கவேண்டும் என்பது நமது கருத்தல்ல. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றுநாயனாரும் கூறியிருக்கிறாரன்றோ!

> "கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
> மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தான்
> சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
> ஆள் வினை யாளப் படும்"

என்பதற்கிணங்க, தேசப்பணியே தெய்வப்பணியாய், சமயப்பணியாய், பொதுநலப் பணியாய்க்கொண்டு தத்தம் கடமைகளை இனிது நிறைவேற்றிவரும் தேசாபிமானிகளும் பெரியோர்களும் உளர்.

> "அஞ்சுவ தஞ்சாமை பேதமை, அஞ்சுவது
> அஞ்சல், அறிவார் தொழில்"

189930

என்பதை மறந்து அரசாங்கத்தைத் தூஷிப்பவனே உண்மைத் தேசாபிமானி என நம் சகோதரர்களில் பலர் தவறாக நினைக்கின்றனர். இது அறியாமையேயாகும். இவற்றால் தனக்கும் தன் தேசமக்களுக்கும் கெடுதல் சம்பவிக்குமேயன்றி எத்துணையும் நன்மை பயக்காது.

ஆதலால் நமது மனம், வாக்கு, காயம் ஆகியவைகளால் ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத லோகோபகாரச் செயல்கள்புரிந்து உத்தம தேசாபிமானிகளாய் உய்வோமாக.

இது உங்களுக்கு.

எமது "சித்தன்" பத்திரிகை ஆரம்பித்ததிலிருந்து பலருக்கும் அனுப்பிவருகிறோம். தமிழ்நாட்டில் அதிக பக்கங்களோடு மிகவும் குறைந்த (8-அணா) சந்தாவில் நடைபெறுவது எங்கள் பத்திரிகை ஒன்றுதான் என்பதைத் தாங்களே அறிவீர்கள்.

ஆகையால் இதுவரை தங்கள் சந்தாவை அனுப்பாத அன்பர்கள் தயவுசெய்து உடனே (ஸ்டாம்பாக அல்லது மணியார்டராக) அனுப்பி பத்திரிகையை ஆதரிப்பதோடு எங்கள் முயற்சியையும் வெற்றிபெறுமாறு செய்வார்களாக.

குறிப்பு:— ஆரம்பத்திலிருந்து பத்திரிகை பெறுபவர்கள் 2 வருட சந்தாவையும், புது சந்தாதாரர்கள் ஒருவருட சந்தாவையும் தவறாது அனுப்பிவைக்கவும்.

மானேஜர்.

ஜார்ஜ் மன்னர் மீது இரங்கற்பா.

(ஓர் மாணவன் பாடியது.)

மன்னவனே! செல்லுதிரோ?
மக்கள் மனத்தை யெலாம்
தின்னவனே! ஏகுதிரோ?
தேர்வேந்தே! நேர்மனைவி

மேரி அரசியையும்
மெய் பதற விட்டுவிட்டு
ஓடுதிரோ? உமக்கழகோ?
உத்தமனே! உரையீரோ?

நாடுபுகழ் நற்றவனே!
நான் மக்கள் நால்வரொடும்
பொன்மகளாம் பொற்கொடியும்
பூந்தடத்துக் கண்களினால்

நீருகுத்து நிலைகுலைய
நீர்போதல் நெறியாமோ?
வேந்தரொடு மாந்தரெலாம்
மெய்பதறத் தள்ளிவிட்டு

சாந்தகுணத் தார் வேந்தே!
தனித்தேகல் முறையேயோ?
நாம்கண்ட அரசரிலே
நாட்டுக்கும் மக்களுக்கும்

நலம் விளைத்த தனி வேந்தல்
நீயன்றி எவருமிலை
நெடியோனே! போகுதியோ?
வரைகடந்த நிலப்பரப்பை
வழுவின்றிப் புரந்தவர்கள்

உலகினிலே அரசரென
உனையன்றி வேறொருவர்

இதுவரையில் இருந்ததிலை
இன்முகமே! நன்மனமே! ஏகுதியோ?
மக்களெலாம் ஒன்றாக்கி
மருவுசமய மெலாம் நன்றாக்கி

மிக்கபுகழுடனே வேற்றுமையெலா மொழித்து
தக்கதருவாய் வளர்ந்த தார்வேந்தே!
எக்குலத்தோர் எம்மதத்தோர்
எந்நாட்டோர் எல்லவர்க்கும்

புக்கிடமாய் நீ திகழ்ந்தாய்
போர்வேந்தே! போகுதியோ?
மடிந்தொழிந்த பெரும் போரில்
மக்கள் மனை அழியாமல்

கடிந்து வெற்றி முரசறைந்த
காளையே நீ ஏகுதியோ?
உள்ளத்தை கொள்ளை கொண்ட
உத்தமனே! உனைப்பிரிந்து

எள்ளத்தனை வாழ இயைகுதிலை
எம்மனமே, எழில் வேந்தே!
கள்ளத்தனமாய் உனைக்கவர்ந்த
காலனையும் அத்தீயோனை

உள்ளத்தே நினைக்குங்கால்
ஓங்குதுவே எங் கோபம்
மண்ணுலகை ஆண்டதுவும்
மக்கள்தமைப் புரந்ததுவும்

இவ்வயதில் போதுமென்று
ஏந்தலே! நீ ஏகினையோ?
விண்ணுலகத் தேவர்களை
வெற்றியுடன் நீ ஆண்டு

பண்ணவன்தன் பதமலரை
பற்றுவாய் ஜார்ஜ் வேந்தே!!!

(வீரகேசரி.)

வருக! தாது!

(ஸ்கேலிடன்.)

இத்தாது வருடத்தை நினைக்கும்போதே என்னையறியாமல் தூக்கிவாரிப் போடுவதுந்தவிர காலஞ்சென்ற என் தாதாவின் தோற்றமும் கண்முன் வந்து நிற்கிறது. ஏனெனில், சென்ற தாதுவின் கொடிய பஞ்சத்தையும், ஜனங்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களைப்பற்றி தாதாதான் எனக்கு சாங்கோபாங்கமாகக் கூறியவர். ஆதலால் தாதாவும், தாதுவும் எனது ஞாபகத்தில் இணைபிரியா நண்பர்களென்பதைக் கோபுரத்தின்மீதிருந்துங் கூறுவேன். அந்தோ! சென்ற தாதுவருடம் நாட்டிற்குக் கொடியதோர் கருப்பைப்பரிசாக வழங்கிற்றாம். அதாவது காலமழையின்றி, பயிர் பச்சைகள் நசித்து, ஆடுமாடுகளும் குன்றி, தொழில், வியாபாரம், செல்வம் முதலியனவும் மறைந்து நாடெங்கும் வறுமைப் பேய் தாண்டவமாடவே மக்கள் பரிதபித்து, ஒரு வேளைக் கஞ்சிக்கும் வகையின்றித் திண்டாடித் தவித்தார்களாம். ஆயினும், ஆங்காங்கு சர்க்காரும், சிற்சில தர்ம பூபதிகளும் கஞ்சித்தொட்டிகள் அமைத்துத் தரித்திரநாராயணர்களின் பசிப்பிணியை ஒருவாறு போக்கிவந்தார்களாம். அதில் எங்கள் தாதா ஒரு மேஸ்திரியாம். அதாவது கஞ்சித்தொட்டிகள் அமைப்பதற்கு இடம், கணக்கு, செலவு முதலிய புள்ளி விபரங்களைக் கூறுவதும், பசியால் துடிதுடிக்கும் மக்களைக் கஞ்சித்தொட்டிகளுக்குக் கூட்டிக்கொண்டு போவதும் தாதாவின் கடமையாம். மேலும் பஞ்சநிவாரணங்கருதி இங்கு 2, 3குளங் குட்டைகளை சர்க்கார் வெட்டெடுத்தார்களாம். அந்த உத்யோகத்தின் பெருமையைத்தாதாவின்வாயாரக்கேட்டாலொழியஎன்ன எழுதியபோதிலும் சுவைக்காது. அதுமுதற்கொண்டுதான் உத்யோகம் என்றால் மோக்ஷலோகம் என்றமனப்பான்மை நமக்கு ஏற்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இல்லாவிடில் கச்சேரி, தாசில்தார்,

துரை, பட்டாளம், முகாம் என்று அடிக்கடி வானமளாவப் புகழ்ந்துபேசிப்பெருமையடித்துக்கொள்ளமாட்டாரல்லவா? ஆதலால், தாதா தாதுவருடப் பஞ்சத்தைப்பற்றி என்னிடம் சவிஸ்தாரமாகக் கூறியிருப்பார் என்பதில் உங்களுக்குச் சந்தேகமேவேண்டாம். அப்படிக் கூறாவிட்டால் தாடியைப் பிடித்திழுக்கிற இழுப்பில் அவ்வளவையுங் கக்கிவிடமாட்டாரா என்ன? ஒரு சங்கதி; இந்தத்தாதுவையும் கண்ணாரப் பார்த்துவிட்டுப் போகாமல் அவர் மண்டையைப் போட்டதுதான் வருந்தத்தக்கது. நிற்க, அந்தப் பஞ்சத்தில்கூட நெல் முதலிய தானியங்கள் 10, 12-படி விற்றனவாம். அப்படியிருந்தும் அது பஞ்சமென்றால் அதற்குமுன் எவ்வளவு மலிவாக தானியாதிகள் விற்பனையாயிருக்கவேண்டும் என்பது புலப்படுகிறதல்லவா? எனவே சென்ற தாதுவில் கொடிய பஞ்சம் வந்ததும் அதன் பயனாகப் பல்லோர் மாண்டதும், வாடியதும் உலகப்பிரசித்தம். இது இவ்வாறாக இப்போது நம்மையணுகி நிற்கும் இத்தாதுவின் லட்சணத்தை சற்று கவனிப்போம்.

ஆ! எங்கும் ஜனத்திரள்; எங்கும் மக்கள் கூட்டம்; யாவும் பரிதாபக்காட்சி; மெலிந்த உடல்கள்; வாடிய முகங்கள்; உயிர்ப் பிணங்கள்; நடைப் பிணங்கள்; கால்வயிற்றுக் கஞ்சிக்கும் கோவிந்தா! ஓர்புறம் வறுமை; மறுபுறம் வேலையில்லாத் திண்டாட்டம். அந்தோ! எங்கும் அறியாமை; எங்கும் தீண்டாமை; ஓர் பக்கம் மதக்கொடுமை; மறுபக்கம் சமூகப்பேய்; ஓர் மூலையில் சாதிப்பித்தம்; மற்றோர் மூலையில் வைதீகவெறி; தெருவில் பிச்சைக்காரன்; பாதையில் பிச்சைக்காரன்; கோவில் குளங்களில், மடம் மண்டபங்களில், சத்திரம் சாவடிகளில் பிச்சைக்காரன்; ரெயில் வண்டிகளிலும் பிச்சைக்காரன்; இம்மட்டோ! ஓரிடத்தில் நாய், கழுதை, பன்றிமுதல் தண்ணீர், தட்டிபலகைவரை வரிபளு. வேறோரிடத்தில் ஆலயம், தேர், திருவிழா, பண்டிகை, விசேஷம், இழவு, கருமாதி, திதி முதலான புரோகிதவரிகள்; போதாக்குறைக்கு, சினிமா, லாட்டரி, போட்டிப் பந்தயம், குதிரைப் பந்தயம் முதலிய நாகரீக வரிகள்; என்னே துன்பம்! என்னே வரிச்சுமை; இக்கலிகாலக் கொடுமைதானென்னே! சுருங்கக்கூறின், இருப்பதா, இறப்பதா? என்பது தெரியாது 'விடன் கொண்ட மீனைப்போல்' தவிக்கவேண்டியதே

இவ்விருபதாம் நூற்றாண்டின் பலனாகும். இத்தகைய கஷ்ட நிஷ்டூரங்களும், ஏற்றத்தாழ்வுகளும், ஜாதிமதக் கொடுமைகளும், ஏமாற்றங்களும், பித்தலாட்டங்களும், ஏக போக உரிமைகளும் தலைவிரித்தாடும் இந்நாட்களின் கோலத்தைப் பஞ்சமென்று சொல்வதா? அல்லது மகாபஞ்சமென்று சொல்வதா? என்பதை தமிழ் அகராதி நிபுணர்கள்தான் நிச்சயிக்கவேண்டும்.

எனவே அக்கரைக்கு இக்கரை பச்சை என்பதுபோல் சென்ற தாதுவில் சோற்றுப்பஞ்சம் என்றால் நடப்பு தாதுவில் உயிர்ப்பஞ்சம், வாழ்க்கைப்பஞ்சம் என்றுதான் சொல்லவேண்டும். தினம் இரண்டு வேளையும் மக்கள் வயிறார உண்டு சுத்தமான பருத்தி ஆடைகளையாவது தாழ்வின்றி அணிந்து, கவலையின்றி, கடனின்றி, வறுமையின்றி, நிம்மதியாய்க் காலங்கழிக்க வகையில்லாத நிலைமையில் விஞ்ஞான முற்போக்கும், நாகரீக வளர்ச்சியும், பொருளாதாரத் திட்டமும், அரசியல்ஞானமும் காட்டில்பெய்தமழையையேஒக்கும். யோசிக்குமிடத்து இந்நாசகரமான வாழ்க்கைப் பஞ்சத்தைவிட சென்ற மகாயுத்தமும், 'பீகார்' 'குவட்டா' பூகம்பங்களும், இதர வெள்ளப் பெருக்குகளும், இத்தாலி–அபிசீனிய யுத்தமும் ஆயிரம் மடங்கு விசேஷம் என்றே முடிவு கட்டலாம். ஆயினும் இத்தாதுவில் நமது "சித்தனுக்கும், சித்தன்" வாசகர்களுக்கும் பஞ்சமிராதென்றே கருதி தாதுவை வரவேற்போமாக.

"மணமகள் தேவை".

S. S. L. C. டிரெயினிங் பாஸ் செய்து, உபாத்தியாயர் வேலையில் மாதம் ரூபாய் 20-சம்பளம் பெற்று வரும் மணமாகாத ஒரு பிராமண வாலிபருக்கு உபாத்திமைக்கல்விப் பயிற்சியுள்ள ஒரு கன்னிப்பெண் தேவை. கன்னிகா விதவையாயினும் சரியே. கீழ்க்கண்ட விலாஸத்துக்கு விபரம் எழுதவும்.

மானேஜர், தமிழ்க்கலாநிலையம்.
காயாமொழி PO. திருநெல்வேலி.

ஸதி–ஸரஸா.

(ஸ்ரீமதி சம்பூர்ணம்.)

'ஹா! தெய்வமே! இனி நான் இவ்வுலகில் அரை விநாடியும் உயிர்வாழேன். தற்கொலையால் ஏற்படும் பைசாச ஜென்மத்தையாகிலும் ஏற்பேனேயன்றி, வியபசாரியாக உலகமிகழ வாழேன். என் கற்பை நிலைபெறச் செய்யவேண்டுமாயின் தற்கொலை செய்துகொள்வதொன்றே ஏற்ற மார்க்கமாகும். இன்றேல் அப்பாதகன் கையில் சிக்கி பலர் மதிக்கும் பாதிவிர்த்தியத்தை இழத்தல் நேரிடும்........ஹே உலக மாதாவே! அடியாள் மானிட சரீரத்துடன் தங்களைப்போற்றுவது இதுவே கடைசி முறை" என்று மொழிந்தவாறு ஒரு இள நங்கை திண்டுக்கல் ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் பாதையிலுள்ள ஒரு கிணற்றில் ஏறி விழும் தருணத்தில், தன்னை யாரோ பின்புறமாக இழுப்பதுகண்டு, திரும்பி நோக்க, அங்கே ஓர் முதிய மாது நிற்கக்கண்டு சற்றுத்திகைத்தாள். அதற்குள் அம்மாது 'குழந்தாய்! நீ யார்? இந்நள்ளிரவில் தற்கொலை செய்துகொள்ளும்படி உனக்குற்ற துயர் யாது?' எனவினவவே அப்பெண் 'அம்மா! நான் இவ்வுலகில் ஆதரிப்பார் யாருமின்றி, மாமி நாத்திகளின் கொடுமைக்காளாகி, அவர்கள் வருவாய் கருதி என்னை ஒரு பாதகனுக்கு ஒப்படைக்க ஏற்பாடு செய்திருந்ததையறிந்து எனது கற்பின் பெருமையை இழக்க ஆற்றாதவளாகி அவ்வொப்பிலாவணிகலனை காக்கும் நிமித்தம் உயிரை வெறுத்து இக்கிணற்றில் விழுங்காலை தாங்கள் விழாவண்ணம் தடுத்துவிட்டீர்கள். தங்களுக்கு நான் இந்நிலையில் இருப்பது எப்படித் தெரிந்தது' என்றாள்.

இவை யாவும் கேட்ட அம்முதியாள் 'யான் ஒன்றரை மணி ரயிலில் சென்னைபோக எண்ணி இவ்வழியே வரும்போது உன் மொழிகளைக்கேட்டு உன்னைத்தடுக்கவே இங்கு

வந்தேன் நீ அஞ்சாமல் என்னுடன் வா. என் சொந்த மகளைப்போல் உன்னைப்பாவிக்கிறேன்' என்று ஆறுதல் மொழி கூறி அவளையும் அழைத்துக்கொண்டு ஸ்டேஷனை நாடி விரைந்து சென்றனள்.

ரயில் வந்ததும் டிக்கட்டு வாங்கிக்கொண்டு இருவரும் ரயிலில் ஏறினர். வண்டியும் புறப்பட்டு திருச்சியை அடைந்தது. ஓர் யுவன் அதே வண்டியில் ஏறி மேல் தட்டில் படுத்துக்கொண்டான். சரஸா துக்கத்தினாலும் பல்வேறு எண்ணங்களினாலும் இதைக்கவனிக்கவில்லை. வண்டியில் பிரயாணிகள் குறைவாயிருந்ததாலும், யாவரும் அயர்ந்து நித்திரையிலாழ்ந்திருந்ததாலும் அந்நங்கையை தன் வரலாற்றை விரிவாய்க்கூறும்படி முதியாள் கேட்டதும் அம்மடைந்தை பின்வருமாறு கூறலுற்றாள்.

'என் தாய்போன்றவளே! ஸரஸா என்று பெயருள்ள அபலையாகிய நான் பெற்றோர்க்கு ஏக புத்திரி. கணவன் வீடு சேர்ந்த சின்னாட்களுக்குள் அந்தோ! என் பெற்றோர் பரகதி அடைந்தனர். பின்னர் எனக்குநேர்ந்த துன்பங்கள்பல. என் மாமியும் விதவையாகிய நாத்தியும் என்னை நாயினுங்கீழாக அவமதித்தும் அடித்தும் துன்புறுத்தினர். மானிட ஜென்மமாதலால் ஒழிக்க அஞ்சினர்போலும்! இம்மட்டோடு நிறுத்தாமல் சென்னையில் படித்துவரும் என் கணவருக்கு என்னைப்பற்றி பலவாறு அவதூறாக எழுதி என்னை அவர் அறவே வெறுக்கும்படி செய்தனர். அம்மம்மா! என்ன கோரம்! என் மாமியின் சகோதரன் மகளாம், அழகில் சீதையின் அசோகவன சகிகளை நிகர்த்த அவளை என் கணவருக்கு மறுவிவாகம் செய்விக்கவேண்டுமாம்; இதற்குத் தடையாய் இருக்கிற என்னை வீட்டைவிட்டுத் துலைக்கவேண்டுமாம். கொலைசெய்வதைவிட விற்றுவிட்டால் திரண்ட பொருள் கிடைக்கும் என்ற அபிப்ராயம் போலும்! இவர்கள் முடிவை சற்றுமுன் தான் படுக்கை அரையில் நித்திரை வராது புரண்டுகொண்டிருக்கும் சமயம் அடுத்த அரையில் இருவரும் ரகசியமாக பேசுவதை கதவின் துவாரத்தின் வழியாகப் பார்த்துக்கேட்டறிந்தேன். அடுத்த நாள் எனக்கு மயக்க மருந்து கொடுத்து நான் பிரக்ஞையற்றிருக்கும் சமயம் என்னைத்தூக்கிப்போகலாமென்று ஓர் வியபசார விடுதியின் தலைவனான மார்வாடியிடம் பேசியிருப்பதாயும், அதில் தனக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைக்குமென்றும், முன்பணமாக ஆயிரம் ரூபாய் வாங்கி வந்திருப்பதாகவும் சொல்லி பணத்தையும் எடுத்துக்காட்டிய என் மாமியாம் பைசாசத்தின் துர்க்குணங்களை என்னென்று புகல்வது. அம்ம! அவளை நினைத்தாலும் மனது பகீரென்கிறது. எனது துக்கசாகரமான இவ்வாழ்க்கையைத் துலைக்கவே இன்று கிணற்றில் விழ எத்தனித்தேன்; அச்சமயம் தாங்கள் வந்து தடுத்து அழைத்து வந்தீர்கள்' என்று கண்ணீர் பெருகக்கூறினாள்.

'ஆ! பொறுமையே பூஷணமாகக்கொண்ட சிறுமியே! உன்னை அத்துன்மார்க்கன் கையில் சிக்காமலும், கிணற்றில் விழாமலும் காப்பாற்றிய கடவுளின் மகிமைதான் என்னே! கண்ணே, நான் அவ்வளவு செல்வமுடையவளாய் இல்லாவிட்டாலும் உன்னைக்காப்பாற்றும் அந்தஸ்துடையவளே. புத்திரப்பேறில்லாப் பேதையாகிய நான் உன்னை என் மகள்போல் பாவிப்பேன். என் சொந்த ஊர் சென்னை. உன் மாமி நாத்தி பெயரென்ன ஸரஸா!' என கிழவி கேட்கவும், மாமி பெயர் சுப்பம்மாள் என்றும், நாத்தி பெயர் சீதம்மாள் என்றும் ஸரஸா மொழிந்து தானும் ஓர் தொழிலிலமர்ந்து கிழவியை காத்துவருவதாகவும் கூறினாள். இவ்வண்ணம் ஸரஸா கூறிக்கொண்டிருந்த மொழிகள் அனைத்தையும் மேற்தட்டில் படுத்திருந்த வாலிபன் விடாது கேட்டுவந்தான். அவன்தான் ஸரஸாவின் ஆருயிர்க்கணவனான சுந்தரராஜன். இவ்வாறெல்லாம் கூறியது தன் மனைவியெனத் தெரிந்துகொண்டு தன் போர்வையை நீக்கி தன் வாழ்க்கைத் துணைவியின் முகத்தை பார்த்தான். தன் அன்னையும் தமக்கையும் அவளுக்குச் செய்த தீங்குகளை நினைத்து ஏங்கினான். திடீரென எழுந்து தன்னை தன் மனைவிக்குத்தெரிவித்து அவளது மன்னிப்பை பெறலாமா என எண்ணினான். பிறகு ஒரு வேளை மன்னியாளோ அல்லது வீட்டைவிட்டு வெளியேறிய சிறுக்கியின் பொய்மொழிகளோ என புத்தி மாறாட்டம் அடைந்தவனாய் மேல்தட்டிலேயே படுத்துக்கொண்டான்.

ரெயில் அடுத்த ஸ்டேஷனில் நின்றதும் சுந்தரராஜன் இறங்கி வெளியே சென்றான். ஸரஸா அவனைத் தன் கணவனெனத் தெரிந்து கிழவியிடம் அவனைச்சுட்டிக் காண்பித்து இருவரும் திகைத்து நிற்கும்போது வண்டியும் புறப்

பட்டது. சுந்தரராஜன் மனதில் தன் மனைவியின் சொற்கள் நெஞ்சை ஊடுருவி விஜயன் அம்புபோல் மாறி மாறிப் பாய்ந்தன. தன்னைப் பெற்றெடுத்த அன்னை தனக்குத் துரோகம் நினைத்தாளா அல்லது தான் தாலிகட்டிய மனைவி துரோகம் நினைத்தாளா என அறியவேண்டி திண்டுக்கல் வந்தடைந்து தீர விசாரித்ததில் தன் மனைவியின் உத்தம நடவடிக்கையையும், தன் தாய் சகோதரி இவர்கள் இழைத்த கொடுமைகளையும் நன்கறிந்தான். அதுமுதல் தனது ஒப்பிலா ஸரஸாவின் கற்பின் மேன்மையையும் அவளனுபவித்த கஷ்டங்களையும் உன்னி உன்னி வெறிபிடித்தவன்போல் ஊரைவிட்டுக்கிளம்பி பல ஊர்கள் சுற்றிக் கடைசியில் சென்னைமாநகரை அடைந்தான். அங்கு தெருக்களில் அலைந்துகொண்டே 'ஹா! உத்தம ஸரஸா! உன்னைக்காத்து ரக்ஷித்த கிழவி இச்சென்னையையன்றோ தன் சொந்தவூரென்று கூறினாள். அந்தோ அவளது முழுவிலாசமும் அறிந்துகொள்ளவில்லையே. பாவியாகிய நான் உனக்குப்பல கஷ்டங்கள் உண்டாகக் காரணமானேனே. ஐயோ! உன்னால் கண்ணைப்போல் பாவிக்கப்பட்டும் உனக்கே துரோகியாய் உன்னை வெறுத்தேனே. கண்ணே! என் தாய் தமக்கையின் கொடுமைகளை எப்படிச் சகித்தனை? எனது வாழ்வின் விளக்கே! உன்னைப் பரிதபிக்க விட்டுச்சென்ற என்னை தெய்வம் இனி சுகமாயிருக்கவிடுமோ. விடாது. ஆ! மாதர்க்கரசியாகிய ஸரஸா! உன்னை என்று காண்பேன் எனப் பலவாறு துக்கித்து, உலக வாழ்க்கையை வெறுத்து தேசசேவையில் ஈடுபட்டான். பலவிடங்களுக்கும் சென்று தேசபக்தி நிறைந்த வசனங்களைப் பிரசங்கித்து வந்தான்.

நிற்க, ஸரஸா தன்னைக்காத்த கிழவியுடன் சென்னை வந்து சேர்ந்து வைத்தியக் கல்லூரியில் பயின்று, முதன்மையாகத்தேறி (Nurse) நர்ஸ் என்ற உத்தியோகத்திலமர்ந்து ஜெனரல் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வந்தனள்.

1930-ஞூ தீபாவளி சமீபித்துவிட்டது. விதேசி ஜவுளிகளும், சுதேசி ஜவுளிகளும் அந்தந்தக்கடைகளில் அழகாக அடுக்கப்பெற்றிருந்தன. சென்னை ஜவுளிக்கடைவீதி புத்துயிர் பெற்றதுபோல் மிளிர்ந்தது. தீபாவளிக்காக விதேசி ஆடை பகிஷ்காரம் எங்கும் மும்முரமாய் நடந்தது. தொண்டர்கள் அணிவகுத்து சாத்வீகமான முறையில் மறியல் செய்துவந்தனர்.

தீபாவளியன்று பிரசித்தி பெற்ற கிஷின்சந்து செல்லாராம் கடையின்முன்னால் சுந்தரராஜன் சில தொண்டர்களுடன் சீமை ஜவுளிகளை ஜனங்கள் வாங்காவண்ணம் மறியல் செய்துகொண்டிருந்தான். அன்று மாலை ஒரு அழகிய மாது ஒரு கிழவியுடன் ஜவுளி வாங்க கடையை அணுகினாள். அவர்களைக்கண்ட சுந்தரராஜன் சமீபம்நெருங்கி அவர்களின் காலில் விழுந்து 'தாயே! கதர் வாங்கி ஏழைகளுக்குக் கஞ்சி வாருங்கள்' எனச்சொல்லிக்கொண்டே பக்கத்திலிருந்த யுவதியைப்பார்த்து சற்று ஆச்சரியத்துடன் பின்தங்கிப் பிரமித்து நின்றுவிட்டான். இதைக்கண்ட அம்மாது 'ஹா! நாதா!' என்று கணவனாகிய சுந்திரராஜன் பக்கம் நெருங்கினாள். அதே சமயம் அங்கு தோன்றிய போலீசார் சுந்தரராஜனையும் மற்றத் தொண்டர்களையும் அடித்துக் கூட்டத்தைக் கலைத்தனர்.

சுந்தரராஜன் மூர்ச்சித்துக்கீழே விழுந்தான். அவன் மண்டையிலிருந்தும் தோளிலிருந்தும் உதிரம் ஆறாகப்பெருகிற்று. அவன் தொண்டர்களால் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோகப்பட்டான். ஸரஸா அனலிற்பட்ட புழுப்போலத்துடித்து கிழவியைப்பார்த்து 'பாட்டி. இப்பொழுது தொண்டர்களால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டவர் என் கணவர். நானும் அவருடன் செல்வேன்' என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு கணவனைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியை அடைந்தாள்.

சுந்தரராஜன் சிகிச்சையில் இருந்தபொழுது ஸரஸாவே அவனுக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்தாள். மண்டையில் பலத்த அடி விழுந்ததால் மூளை கலங்கலுற்று பலவாறு தான் வளர்ந்ததையும், ரயிலில் மனைவி மொழிந்த மொழிகளையும், தேசிய வசனங்களையும் வாயில் வந்தபடி பிதற்றுவதிலிருந்து ஸரஸா தான் ரயிலில் கிழவியுடன் பேசியதைக் கணவரும் கேட்டிருக்கிறார் என உணர்ந்தாள். அவன் தனது கஷ்டங்களைக்கவனியாமல் ஸரஸா அனுபவித்த துன்பங்களை எண்ணி பச்சாத்தாபமுறுவதைக்கண்டு அவனது அருங்குணத்தைப்போற்றி ஆறுத்துயருற்றாள்.

ஸரஸா மிக்க பொறுப்புடனும் ஜாக்கிரதையுடனும் தன் கணவனின் ரணங்கள் ஆறுவதற்கு சிகிச்சை செய்தும், அவ

னது ரண ஜன்னி, காய்ச்சல்விலக மருந்துகள் தவறாமல்கொடுத்தும் சீக்கிரத்தில் குணமடையும்படிசெய்தாள். சுந்தரராஜனின் ஜன்னியும் ஜுரமும் விலகவே அவன் அயர்ந்து நித்திரை புரியலானான். சதா அருகாமையிலேயே இருந்துவந்த ஸரஸா தன் கணவன் சுயப்பிரக்ஞை அடைந்தனன் எனத் தெரிந்து அவன் விழிக்கும் தருணம் அவனது இரு கரங்களையும் பற்றித் தன் இனிய குரலில் 'நாதா' என அழைத்தாள். சுந்தரராஜன் கண் விழித்தான். தன் அருகில் நர்ஸ் ஆடையணிந்த ஓர் மாது நிற்பதைக்கண்டான். முதலில் அவளை இன்னாரென அறிந்துகொள்ள இயலவில்லை. முகஜாடை மட்டும் தெரிந்ததாய் இருந்ததனால் சற்று கண்ணை மூடிக்கொண்டு யோசிக்கலானான். உடனே ஸரஸா 'நாதா! இன்னமும் தங்களுக்கு என்மேல் சந்தேகமா? என்னைப் பார்த்த கண்கள் மறுபடி மூடுவானேன்? இன்னமுமா தாங்கள் என்னை வெறுக்கிறீர்கள்'? என்று கண்களில் நீர் பெருக தழதழத்த குரலில் மொழிந்தாள்.

உடனே சுந்தரராஜன் கண் விழித்து 'ஹா ஸரஸா! மாக துரோகியான என்னை நீ மன்னிப்பாயாக' என்று மெல்லிய குரலில் கேட்டான். தனதுகணவனின் வாத்ஸல்யத்தை உணர்ந்த ஸரஸா இனிய மொழியில் 'நாதா! அடிமையாகிய என்னிடம் தாங்கள் மன்னிப்புக் கேட்பது அழகன்று. தங்கள் உத்திரவன்னியில் வீட்டை விட்டு வெளியேறிய பாவியாகிய நானன்றோ தங்களிடம் மன்னிப்புப் பெறுதல் வேண்டும். என்னையும் தாங்கள் மன்னிப்பீரா?' என்று கூறிக் கணவனின் பாதத்தில் வீழ்ந்தாள்.

தன் மனைவியின் அரும் பெரும் குணங்களைக்கண்டு மகிழ்ந்த சுந்தரராஜன் வெகு சீக்கிரத்தில் குணமடைந்து ஆஸ்பத்திரியை விட்டு வெளிப்போந்து காதிவஸ்திராலய காரியதரிசியாக இருந்து வருகின்றான். ஸரஸா தன் வேலையை ராஜீனாமாச்செய்து தன் கணவனுடன் தேசசேவையில் ஈடுபட்டு சூரியனும் சாயாதேவியும்போல இருவரும் விளங்கி வருகின்றனர்.

அன்னையின் முறையீடு.

(மு. கா. அம்பலவாணன்.)

(தூண்டிற் புழுவினைப்போல்-என்ற பாரதியார் மெட்டு.

1. பூதலத் தெம்மக்காள் இந்தப்
புண்ணிய பூமியிடை
ஆதரவில்லை யெமக் கின்று
அன்பு செய்வாரிலையே

2. தண்டமிழ் நாடதிலே எந்தன்
சக்தியை நீர்மறந்தீர்
தொண்டரொரு சிலர்கள் எனக்குற்ற
துன்பத்தை நன்கறிவர்

3. ஆதியி லென்கலைகள் இங்கு
ஆக்கம் பெற்றனவாய்
பேதமிலாப் புலவர் அரசரும்
பேணியே தாம் வளர்த்தார்

4. மாநில முற்றிலுமே உங்களுக்குள்
வறுமை ஒன்றுமில்லை
தானமுங் கொடுத்தார் தமிழின்
தன்மைமிக வுணர்ந்தார்

5. சாதிப்பூசல்க ளில்லை சமயச்
சண்டை பலவுமில்லை
ஆதியிலெந்தன் மக்காள் தொன்மையின்
அன்புநிலை யுணர்வீர்

6. நாட்டு வயித்தியமும் தொழிற்கல்வி
நல்ல நெசவுகளும்
வாட்டம் சிறிதுமிலா வளர்த்து
வண்மையுட னிருந்தீர்

7\. ஒற்றுமை குன்றினதால் உங்கள்
உணர்ச்சி போனமையால்
பெற்றவெம் மக்களேகேள் உங்கள்
பெருமை குலைந்ததுவாம்

8\. நாட்டுப்பற்றை விட்டீர் அன்னையின்
நன்மைநிலை மறந்தீர்
வாட்டமாய் ஓர்சிலரை உங்களில்
வருத்துதல் அழகோ

9\. பிறவியினு லெவனும் உயர்விலை
பேணும் விதியதனை
அறம்மிக வளர்த்தோன் வள்ளுவன்
னருள் மொழிமறந்தீர்

10\. கேவலம் நாய்களையும் தீண்டுவீர்
கேவலமோ மனிதன்
ஆவலுடன் தெருவில் வந்திடில்
ஆண்மை சிதைந்திடுமோ?

11\. கஞ்சிக்கு உப்பில்லா மக்களின்
கஷ்ட நிலையதனை
கொஞ்சமும் நெஞ்சிரக்கம் பாராக்
கொடுமை என்னசொல்வேன்

12\. ஆண்டவன் சொத்ததற்கு மக்க
ளனைவரும் உரியர்
வேண்டவும் கொடுக்கா நுங்களின்
மேன்மை யென்னவோதாம்

13\. சமத்துவமான தர்மம் எங்கும்
தானே வளர்த்திடுவீர்
நமக்கொரு கேடில்லை என்னும்
நன்மை யுணர்ந்திடுவீர்.

சினிமா பகுதி.

ஸ்ரீமதி சுப்புலக்ஷிமியின் நன்றி.

சென்ற மீ சென்னையில் சினிமா தேர்தல் நடைபெற்றதில் ஸ்ரீமதி S. D. சுப்புலக்ஷிமிக்கு சிறந்த நடிகரெனப் பாராட்டி அதிக ஓட் கிடைத்து வெற்றி பெற்றார். ஸ்ரீமதி சுப்புலக்ஷிமி நடித்த எல்லாப்படங்களிலும் பாடல் மேன்மை, வேஷப்பொருத்தம், முகவெட்டு, தோற்றம்முதலியன விசேஷிக்கத்தக்கதெனினும், ரசிகர்கள் விரும்பும் இயற்கையும், நடிப்பும், மனோஉணர்ச்சியும் கொண்டது 'சாரங்கதராவில்' அவரது பங்கே அவரது பெருமையை உயர்த்தியது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும். இனி எப்படத்தில் அவர் நடிப்பதாயிருந்தாலும், இயற்கையாகவும், உணர்ச்சியோடும், உணர்ச்சிக்கொத்த முகச்சாயலோடும் நடிப்பதாயின் சினிமா உலகைச் சிறப்பித்த தமிழ் மாதருள் முதன்மை ஸ்தானம் பெறலாம். அதோடு அவர் அடிக்கடி ஹிந்தி, இங்கிலீஷ் பேசும் படங்களை நேரில் பார்க்கப் பிரியப்படவேண்டும். சாரங்கதராவின் நடிப்பின் உயர்வைப்பார்த்த தமிழர், உஷா கல்யாணத்திலும், சதாரத்திலும் பெரிதும் ஏமாற்றமடைந்தனரென்பது மிகையாகாது.

சினிமா உலகில் மிகவும் கேவலமான ஒரு அம்சத்தைக் கூறப்பெரிதும் வெட்கப்படுகிறோம். பேசும் படங்களைப் பார்த்தேயிராத அநேகர்-பார்க்கப் பிரியப்படாத அநேகர்-சினிமா பார்த்தால் கண் கெட்டுவிடாதா என்று வாயார கூசாது கூறிய அநேகர் இன்று பேசும் படத்தில் நடிகர்களாயிருப்பது நாட்டின் துரதிர்ஷ்டமென்றும், சினிமா உலகின் ஏழ்மை என்றும் கூறுது இதை வேறென்னென்று கூறுவது?

தேர்தலில் முதல்தர வெற்றிபெற்ற ஸ்ரீமதி S. D. சுப்புலக்ஷிமி கல்கத்தாவினின்று தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்து எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடுவதாவது:-

"சென்னை பிலிம் தேர்தலில் தமிழ் பேசும் படங்களில் ஸ்திரீ நடிகர்களில் என்னை முதல் ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுத்ததற்காக என் ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஸ்தானத்திற்கு நான் அருகதையுள்ளவளல்லவென்று உண்மையாக நம்புகிறேன். ஏனெனில் நான் கற்றுக்கொள்ளவேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. கோஹரின் திறமையைக்கண்டு ஆழ்ந்தபக்திகொண்டவள் நான். ஆகையால் வருங்காலத்தில் நான் மிகவும்சிறப்பாக நடிக்கவேண்டுமென்று பொது ஜனங்கள் எதிர்பார்ப்பதாகவும், அதற்காக என்னை உற்சாகப் படுத்துவதாகவும்தான் நான் இந்தத் தேர்தல் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. நீங்கள் ஏமாற்றமடையாதபடிக்கு கடவுள் எனக்கருளவேண்டுமென்றும் கூற விரும்புகிறேன். சிறந்த லட்சியத்துடன் பிடிக்கப்பட்ட படங்கள் மூலம் சமூகத்திற்கே சிறந்த சேவைசெய்ய முடியுமென்பது என்னுடைய உறுதி ஆகும். ஆகையால் என்னுடைய நடிப்புத்தொழில் வெறும் தொழில் என்று மாத்திரம் கருதாமல் சமூகசேவை என்றே கருதி வருகிறேன்."

உங்களுடைய ஆசீர்வாத பலத்தினாலும், ஒத்துழைப்பினாலும் என் லட்சியங்கள் சித்தியாகுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

S. D. சுப்புலக்ஷிமி.

ஸ்ரீ பழனியாண்டவர் தாயத்து

அன்பர்கள் மனக்கவலைகளை நீக்கி, சரீர சௌக்யம், ஆயுள் விர்த்தி, சந்தான பாக்யம் உண்டாக்கும்.

தாயத்து 1-க்கு ரூ. 1—4—0.

ஸ்பெஷல் தாயத்து சார்ஜ் வேறு.

S.V. ராஜப்பா, மலைக்கோவில் மிராஸ், பழனி. S.I.

மனித சக்தி.

(ஆசிரியர், S. சிவனையா.)

ஆர்கலியுடுத்த அவனியின்கண் எல்லாம் வல்ல இறைவன் சிருஷ்டியின் திறத்தாலியங்கப்பட்ட எழுவகைத் தோற்றங்களினும் மேன்மையுடைய அறிவையும், விழுமிய நோக்கமுந்தாங்கி வரப்பட்டவன் மனிதனே என்பது யாவரும் ஒப்பமுடிந்த உண்மையே. மக்களின் இவ்வறிவும் காலஞ்செல்லச்செல்ல பேரறிவு பிரகாசித்துக்கொண்டு வருகிறதென்பது நன்கு ஊன்றி நோக்குமிடத்துத் தெள்ளிதின் விளங்கும். இதற்குச்சான்றாக உலகின்கண் மிளிர்கின்ற மரக்கலம், ஆகாய ஊர்தி, ஆகாய வசனி, தூரதிருஷ்டிக் கண்ணாடி, ஆடும்பாடும் படக்காட்சி, மின்சாரம் இவை போன்ற பல்வேறு வகையுள்ள இயந்திரங்களுமேயாகும். இவைகளின் சாதனங்களைக்கொண்டு இயற்கையாலேற்பட்ட கடல், நதி, மலை, இருள், தூரம் ஆகிய இவைகளை செயற்கையாலாகிய (மேற்கண்ட) சாதனங்களால் வெல்ல முயல்கின்றான்; வென்றும் வருகின்றான்.

உலகமக்கள், நாகரீகமென்னும் பேரறிவு பெறப்படாத காலந்தொட்டு இந்நாள் வரை உலகிலேற்பட்டிருக்கும் மாற்றங்களைக் கவனித்து நோக்குமிடத்து மக்களின் அறிவுச்சக்தியையே பெரிதும் வியக்கவேண்டியதாகும்.

இதற்குச் சான்றாக இவ்விருபதாம் நூற்றாண்டில் இரசாயன நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரப்பொம்மைகளால் வீடுகளைக்காவல் செய்துகொள்ளவும், சமையல் செய்யவும், கேட்கும் கேள்விகளுக்குப்பதில்கூறவும், சங்கீத ஸ்வரம் தவறாது கீதங்கள் பாடவும் அது உபயோகிக்கப்பட்டுவருவதைக் கண்டும் கேட்டும் ஆனந்தமுறாதார் யார்? இதே பொம்மையொன்று தற்சமயம் கானடா தேசத்தில் உள்ள மாண்ட்ரீஸ் நகரில் தங்கச் சுரங்கத்தில் காவல்புரிந்து வந்ததாகவும், அதிலிருந்து தங்கப்பாளங்களைக் கவர்ந்து

செல்லவந்த கள்வர்கள் காவலாளி ஒருவனே இருக்கிறானென்றெண்ணி அலட்சியமாக இயந்திரப் பொம்மையினருகே வந்ததாகவும், உடனே அவர்களை எல்லாம் இங்குமங்கும் நகரவொட்டாமல் தடைசெய்து, போலீஸ் ஸ்டேஷனுக்குச் சேதி அறிவித்து அவர்களை போலீசார் வசம் ஒப்புவித்ததாகவும் வாசகர்கள் அறிந்திருக்கலாம்.

"எல்லாம் தெய்வச்செயல், அவனன்றி ஓரணுவுமசையாது" என்ற பரந்த நோக்கத்தில் நிறைந்த உள்ளத்தோடு சென்றவர்களின் வாழ்க்கையை அங்கீகரிக்க இடந்தராதவனாய், தன் முயற்சி என்னும் வீர உணர்ச்சியில் தலை தூக்கி நின்று புஜந்தட்டி ஆரவாரிக்கும் நிலைமையில் மனிதனின் பகுத்தறிவு விரிவுபட்டுக்கொண்டு வருவதைக்காணக் காண மனிதவடிவுகொண்ட எவனும் இம்மக்கள் அறிவின் அற்புத சக்தியை வியக்காமலிருக்கமுடியாது.

இச்சக்தியின் பலனாய் மக்கள் சமூகம் அடைந்துள்ள மேன்மைதான் என்னே எனச்சற்றிங்காராய்வோம். என்னாட்டினராலும் நன்னாடெனப் போற்றப்படும் நம் நாட்டில் (இந்தியாவில்) தோன்றி, மேல் நாட்டினரும், கீழ் நாட்டினரும் வியக்கத்தக்கதாக தாவர சாஸ்திரத்தில் நிபுணரெனப் பெயர் பெற்றவரும், உண்ணல், உறங்கல், உற்சாகம், அச்சம், மைதுனம் ஆகிய குணங்கள் தாவரங்களுக்கும் உண்டெனக்கருவிகளின் மூலம் தெள்ளென மக்களுக்கு விளக்கிக் காட்டி பரிசுபெற்றவருமான ஸ்ரீமான் ஜகதீஸ் சந்திரபோஸ் என்ற பெரியாரின் அறிவின் திறத்தையும், இரசாயன சாஸ்திரத்தில் நிபுணரென ஐன்ஸ்டின் என்னும் மேனாட்டு நிபுணருக்கு இணையாக மதிக்கப்படுபவரும், சர்வ தேச சங்கத்தாரால் தமது ஆராய்ச்சியின் திறத்திற்காக நோபல் பரிசு பெற்றவருமாகிய ஸர். சி. வி. ராமன் என்ற பெரியாரின் அறிவுச்சக்தியையும் பத்திரிகைகளில் போற்றாதாருளரோ? பின்னும் அமெரிக்காவில் பெயர் பெற்ற இரசாயன நிபுணரான டாக்டர் ராபர்ட் ஜி கால்ட் என்பவர் செவிடர்களுக்கென ஓர் நவீன ரேடியோ டெலிபோன் கண்டுபிடித்துள்ளார். செவிடர்கள் டெலிபோன் கருவியில் விரல்களை வைத்து அதில் ஏற்படும் உணர்ச்சியைக்கொண்டு பேசுவதை அறிந்துகொள்ளலாமென்கிறார். என்னே இவருடைய ஆராய்ச்சியின்

189920

திறன்! மற்றும் ஆராய்ச்சியுலகில் மிக்க கீர்த்திவாய்ந்த மேனாட்டு நிபுணர்களால் செயற்கை உயிர்கொடுக்கும் முறை என்னும் வகையில் இறந்த ஜீவன்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் அதிசயங்களும் என்றும் மாறா இளமைப்பருவத்தை மக்களடைந்து இன்புற்று வாழ்ந்துலவுவதற்குமாக முயற்சிகள் நடந்துகொண்டு வருவதைப்பற்றியும், முயற்சித்துக் கண்டுள்ள உண்மைகளைப்பற்றியும் போற்றாதாரில்லை.

சிக்காகோ சர்வகலாசாலை ரசாயன பண்டிதராயிருக்கும் ஸ்ரீ யோனார்டு கிலர் ஒருவித மருந்து கண்டுபிடித்திருக்கிறார். அம்மருந்தை ஒரு திருடனின் தேகத்தில் இன்ஜக்ஷன் செய்துவிட்டால் அவன் பொய் சொல்லவே முடியாதாம். உண்மையையே உள்ளபடி கூறிவிடுகின்றானாம். இவ்வாராய்ச்சி கள்வர் உலகத்திற்கு ஒரு பெரும் ஆபத்தை உண்டு பண்ணி இருக்கிறதென்பதைக் கூறவும் வேண்டுமோ?

ரஷ்யாவில் பிட்ஸ்பர்க் என்னுமிடத்தில் ஒரு ரஷ்ய டாக்டர் கி. பி. 1849-ல் பெட்ரோலியம் கண்டுபிடித்தார். அதை அவர் முதன்முதலில் பலவித நோய்களுக்கு மருந்தாக உபயோகித்து வந்தார். அது நாளடைவில் மக்களின் திறத்தால் இன்ஜின் (Engine) உணவுப்பொருளாக மாற்றப்பட்டு அதன் உதவியால் மோட்டார், மோட்டார் சைகிள் முதலிய ஊர்திகளை ஈர்த்துச் செல்வதற்கும், பல்வேறு யந்திரங்கள் சுழன்று வேலை செய்வதற்குமாக அது உபயோகிக்கப்பட்டுவருகிறதென்பது யாவருமுணர்ந்ததே.

செயற்கை, இயற்கை என்னும் இரு பகுப்புகளில் மக்களின் முயற்சி இன்றித்தானே இயங்கித் தோன்றுவனவே இயற்கையமைப்பின்பாற் பட்டவைகளென இயம்பலாகும். இவை பூகம்பம், சூறாவளி என்னுங்கொடிய சுழல் காற்று, இடி, மழை, புயல், எரிமலை முதலியவைகளே. இவைகளுக்கு ஆராய்ச்சியுலகினர் " இயற்கையின் கோபம் " எனப்பெயர் வழங்கியிருக்கின்றனர். இவற்றால் மக்களுக்கேற்படும் கஷ்டநஷ்டங்கள் கொஞ்சமல்ல.

பிரதி வருடமும் எரி மலை, பூகம்பம், அதிர்ச்சி இவைகளால் ஜப்பான் போன்ற பிரதேசங்களில் ஏற்பட்டு வரும் நஷ்டங்களைப்பற்றிப் பத்திரிகைவாயிலாகக் கண்டுங்கேட்டும் வருகிறோம். சென்ற சிலமாதங்களுக்கு முன் குவெ[illegible]

ஏற்பட்ட பூகம்ப அதிர்ச்சியால் நேர்ந்துள்ள பொருள்-உயிர்ச்சேதங்களைப்பற்றி அறியாத இந்தியனில்லை. அதன் பொருட்டு "குவட்டர் பூகம்ப நிவாரண நிதி" என்னும் பெயருடன் பொருளுதவி செய்தது யாவரும் அறிந்ததே. கொடும் புயல்காற்றுகளின் கோபத்தால் சமுத்திரங்களில் திசைதப்பிச் சென்றதும், நீரில் மூழ்கி மடிந்ததுமான மரக்கலங்களின் தொகையும், மட்டற்ற மனைகள் (மேற் கட்டிடங்கள்) மண்ணோடு மண்ணாய் மாண்டொழிந்ததும் கணக்கிலடங்காதென்பது கண்கூடு. வெள்ளப்பெருக்கின் கொள்ளையின் திறத்தால் மருத நிலங்களின் மாபெரு மருங்கு பாலை நிலங்களாக மாற்றப்படுவதையும் அறியாதார் யார்? இம்மாற்றத்திற்குக் காரணம் மிதமிஞ்சின மழையன்றோ!

ஆசவே இந்த இயற்கையை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்று அவைகளினால் ஏற்படும் சேதங்களை அறவே ஒழிக்க வேண்டும் என்றும், இவைகளோடு எதிர்த்துப் போராட முடியுமென்றும் ஜப்பான் இரசாயன நிபுணர்களில் ஒருவரான 'நிகோலா டெல்ஸா' என்பவர் கூறுகிறார். இடி ஆகாயத்தில் 600 மைல் உயரத்திலிருந்தே பூமியைத்தாக்குகிறது. அப்படி அது தாக்க நேரும்போது இந்த நிமிஷத்தில் இன்ன இடத்தில் இடி விழப்போகிறதெனக் கண்டுகொள்ளவும், அவ்விடியைக் குறித்த இடத்திலிருந்து அப்பால் வெகுதூரத்தில் விழச்செய்வதற்குமாக ஆராய்ச்சியின் திறத்தால் ஓர் நவீனக் கருவி ஒன்று கண்டுபிடித்து இருக்கிறாராம்.

இவர் அமெரிக்கா கொல்ரேடோ என்னுமிடத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டு வரும்போது இக்கருவியைக்கொண்டு அங்குள்ளவருக்கு நிரூபித்துக் காட்டினாரென்றும் சொல்லுகிறார். பின்னும் ரஷ்ய டாக்டர் வொர்னப் என்பவர் கிழவரைக் குமராராக்கும் முறை ஒன்று கண்டுபிடித்து பலன்பெற்றிருக்கின்றார். இம்முறைக்கு அவர் 'சிம்பன்ஸி' என்னும் ஒருவகைக் குரங்கின் இரத்தத் தசைகளையே உபயோகித்து வந்ததாகவும் இவருடையபரீக்ஷை அநேகமாய் வெற்றிபெற்றதாகவும் கூறுகிறார். அனேக கிழவர்கள் குரங்கின் தசையைக்கொண்டு சிகிச்சைபெற முன்வந்திருக்கின்றனர். ஓர் கிழவர் 65 வயதுடையவரென வைத்துக்கொண்டால் (மேற்

கூறிய குரங்கின் தசையைக்கொண்டு சிகிச்சை செய்தால்) சுமார் 10 வருடங்கள் வரை நல்ல பலன் பெற்றியங்குவார். மறுபடியும் முன்னைய சிகிச்சையை செய்துகொள்வாரானால் பின்னும் 10 வருடங்கள் வரை திடகாத்திரமாக இருப்பார் என நம்பப்படுகிறது. 65 வயது கிழவராகி மரணமடையும் மக்கள் அனந்தம் பேருளர். ஆகலால் குரங்கின் தசை சிகிச்சையால் கிழவர்களை (60 + 25) 85 வருடங்களுக்கு மண்ணுலகில் உயிரோடு நல்ல உறம்பெற்று இருக்கச்செய்யலாம் எனக்கூறுகின்றார். எனவே இவ்வற்புத ஆராய்ச்சிக்கு இலக்காயுள்ள இப்பெரியாரை ஓர் நவீன பிரமன் எனக்கூறுவதில் என்ன தடை? இதுகாறும் கூறிவந்த அறிவுடைப் பெரியாரின் ஆறாய்ச்சித்திறத்தின் அறிகுறிக்கிலக்காய் அவனியில் தோன்றியுள்ள மாற்றங்கள் கணக்கிலவென்பது காணக்கிடக்கின்றனவன்றோ!

ஆகவே! காலச்சக்க்ரச் சுழற்சியின் பயனாய், எதிர்கால உலகில் என்னாட்டு மக்களும், தன்னாடு பிறநாடு என்ற பேரவாவில் சிக்குண்டு மாளாது யாவரும் சகோதரரே என்ற பான்மைநிறம்பி ஒன்றுகூடி வாழுங்காலமும் ஒன்றுண்டென எண்ணவேண்டியதாகவன்றோ மக்களின் பகுத்தறிவு விரிவுபட்டுக்கொண்டு வருகிறது. (எவ்வாறெனின் இந்தியாவில் காலை உணவு உண்ட இந்தியன் ஒருவன் அதே நண்பகல் போஜனத்தை ஐரோப்பாவிலுள்ள ஓரில்லத்தில் அருந்தி, அமெரிக்காவில் தங்கி, மறு தினம் ஜப்பானியரின் ஜாகையைக்கண்ணுற்று இந்தியா வந்தடையும் விபரீதம் கூடிய சீக்கிரம் ஆகாய விமானத்தினுதவியால் வரப்போகிறதன்றோ! அக்காலத்தில் இந்தியனொருவன் தன்னுடன் பிறந்தாளை ஜப்பானியன் ஒருவனுக்கு மணந்து கொடுத்து, தான் ஒரு ஐரோப்பிய மாதைக்காதலியாக ஏற்று, தன் சகோதரனுக்கு அமெரிக்காவில் பெண் பார்த்துக்கொடுத்து வாழ்க்கை இன்பத்திலீடுபட்டு இனிதுவாழுங்காலம் ஏற்படும்போது, தன்னாடு, பிறநாடு, என்ற பான்மை நிலைபெறுதன்றோ!) ஆகவே

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்ற முதியோர் முதுமொழிக்கிணங்க மேற்கூறப்பட்ட அறிஞர்கள் தம் ஆராய்ச்சியின் திறத்தால் அழியாப்புகழ் அவனியில் நிறுவினரன்றோ.

இவ்வற்புத ஆராய்ச்சிக்கு முன்னணியானது எதுஎன ஆராயுங்கால் மக்களின் அறிவே என்பது புலனாகும். இவ்வறிவும் நாளடைவில் 'விருத்தியடைந்து அதிசயிக்கக்கூடிய அரிய பெரிய ஆராய்ச்சியாளராய்த் திகழ்வதற்குப்போதிய சாதனந்தானென்னே என ஊன்றி நோக்குவோமாகின் அறிவின் தாயென அமையப்பெற்றதான கல்வியே என்பது புலனாகும்.

ஆகவே ஒவ்வொருவரும் பலதுறைகளிலும் ஆராய்ச்சி நிபுணர்களாக விளங்கி நாட்டிற்குரிய நலன்களைப் பெறுவதற்கான முறையில் கல்விபயின்று "மனித சக்தியின்" உண்மையை இன்னும் தெளிவுபடுத்தி வாழ்ந்துலவ மிகுதியும் அவாவுகிறோம்.

நீங்கள் இதைப்படித்ததுண்டா?

மனச்சாந்தியும், அன்பும், ஒழுக்கமும் அடையவிரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புஸ்தகம்.

மார்க்க அரேலியர்

ஆத்மசிந்தனை.

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மொழிபெயர்த்தெழுதியது. எளிய தமிழ். இனிய நடை. ஆண் பெண் அனைவர்க்கும் இன்பமும், பயனும் அளிக்கத்தக்கது.

பிரதி 1-க்கு விலை அணா 8.

பத்தணா ஸ்டாம்பாக அல்லது மணியார்டர் செய்தால் ஒரு பிரதி அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:-

மானேஜர், சித்தன் காரியாலயம், பழனி S. I.

தெலுங்குமொழிப்புலவர் பெருமக்கள்.

(கோவை, திரு சி. கு. நாராயணசாமி முதலியார்)

IV. பத்தன்னகவி.

இப்பெயரிய புலவரவர் கி. பி. 1261ஆம் ஆண்டில் தெலுங்குநாட்டில் சீர்சிறக்கப் புகழ்பெருகநின்ற பெரியாரென்று, ஸ்ரீமான் ஜயந்திராம பந்துலு அவர்கள் பலவகையாக ஆராய்ந்து நிர்ணயித்துக் கூறியிருக்கின்றனர். இவரும் முன்னர்கூறிய கோனபுத்தா ரெட்டியைப்போலவே வைணவ பக்தர். சூரிய வமிசத்துதித்த சுத்தக்ஷத்திரியர். இவருக்குக் 'கவிப்பிரமன்', 'கிருஷ்ணா தக்ஷிண சட் சகஸ்திர விஷயாதீஸ்வரன்' என்ற விருதுப்பெயர்கள் சிறப்பாக வழங்கப்பட்டன. கிருஷ்ணா தக்ஷிண சட் சகஸ்திர விஷயாதீஸ்வரன் என்பதற்கு—'கிருஷ்ணாநதியின் தெற்கிலுள்ள ஆறாயிரம் நாட்டுக்கவிப்பெருமான்' என்பது பொருள். இப்புலவர் 'நீதிசாஸ்திர முக்தாவளி', 'சுமதிசதகம்' என்ற இரு நீதிநூல்களை அழகுபெற இயற்றினர். இவற்றுள் முன்னதாகிய நீதிசாஸ்திர முக்தாவளியை இருகூறாகப்பிரித்து முதற்கூறில் அரசர்களுக்குரிய நீதிகளையும்; இரண்டாம் கூறில், குடிமக்களுக்குரிய நீதிகளையும் பெரிதும் பயன்படும்முறையில் ஆக்கினார். 'சுமதி சதகம், வேமன்ன பத்தியத்தைப்போலவே நீதியும், சுவையும், வேதாந்த தத்துவங்களும், அறிவுத்துரைகளும் நிரம்பி அழகுபெற விளங்கும் இனியநூல். இவ்விரு நூல்களும் ஆந்திர மக்களுக்கு இனிய விருந்துகளாம். சுமதிசதகத்திலுள்ள இனிமை மிதும் பத்தியங்களை மிக்க விருப்பத்துடன் ஓதி இன்புறும் ஒவ்வொரு ஆந்திரச் சிறுவனும், அந்நூல் இன்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பெற்றிருந்தும், அதன் மகிமையும், சுவையும் குன்றாமல் ஆந்திர நாடுகளனைத்திலும், தனது சக்கிராதிபத்தியத்தை நிலைநாட்டி வருவதற்குப் பெரிதும் வியந்து மகிழ்கின்றானெனின், இந்

நூலின் பெருமையை எவ்வாறு புகழ்வது? ஓதுவதற்கு வகையும், நாவுக்கு நயமும், மனதிற்கு மனோகரமும், அழகிய நடையும் வாய்ந்து, ஆந்திரலோகத்தின் பெரும் புகழுக்கும் உறைவிடமான பிரபந்தத்தை இயற்றியதனாலன்றோ பத்தன்னகவியின் பிறப்பு பயன்பெறுதற்காயிற்று. ஆந்திர மொழியுள்ளவரையிலும் இப்புலவர் பெருந்தகையின் பெயர் யாருமே மறந்துவிடமாட்டார்கள்.

V. ஸ்ரீ கிருஷ்ணதேவராயர்.
(கி.பி. 1509—1525)

தக்ஷிணதேசம் அனைத்தும் அரசுபுரிந்த சக்கரவர்த்திகளனைவரிலும், மிகவும் புகழும், மேன்மையும் வாய்ந்த இப்பேரரசன் கி. பி. 1509—1525-ஆம் ஆண்டில் விஜயநகரத்து அரியாசனத்தை அலங்கரித்து அணிபெற விளங்கி இருந்தனர். ஆந்திரமொழி சமஸ்கரணகாலத்தில், பேரரசப் பெருமையனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவராயர் மக்கள் பேரன்பிற்குரியராக விளங்கியிருந்தனர். இவர் புவியரசராக விளங்கியிருந்ததுபோலவே, கவியரசராகக், கவின்பெறத் திகழ்ந்தனர். இம்மன்னர்பெருமான் இயற்றிய "ஆமுக்தமாலியம்" (ஸ்ரீவிஷ்ணுசித்தியம்) ஆந்திர கவிவல்லோர்களில் இவரை உயரியஸ்தானத்திற்கு உயர்த்துவதாகவுள்ளது. இவ்வுயரிய நூல், வைணவமதத்திற்குரிய தெய்வமாகிய திருமாலின் திருவடிகளையே தஞ்சமென்றடைந்து பக்தி செய்து முக்திபெறுதற்கான மூலங்களையே வற்புறுத்திக் கூறுகின்றது. தற்கால நோக்கத்துடன்கவனித்தாலும் இம்மாபெருங்கவியிடத்தில் நமது மதிப்புரையாளர் மிகுதியான விருப்பத்தைக்கொள்வார்களென்பது உறுதியான விஷயம்.

பழமையானகவிகளின் கற்பனையைக்கடந்தும், பிரபந்த அமைப்பும், இனிய நடை, முதலியவற்றிலும், சுதந்தரக் கற்பனை — பாவனாதிகளிலும்; 'ஆமுக்தமாலியம்' வெகு நன்றாகவே இயற்றப்பட்ட அருமைமிக்க நூலென்றே தாராளமாகக்கூறலாம். தெலுங்குமொழியிலுள்ள பஞ்சகாவியங்களுள் நாரிகேளபாகமான இப்பிரபந்தம், மிகவும் கடினமானதெனினும் பிரபந்த நடை, கோட்பாடு முதலியவற்றை ஸ்ரீகிருஷ்ணதேவராயர் இப்பிரபந்தத்தில் பொருந்தும்படி செய்திருக்கின்றனர்.

இன்னொரு முக்கிய விஷயம், சக்கராதிபத்தியத்தைக் கைக்கொண்டு அரியாசனத்தில் அமர்ந்து மேன்மையுடன் விளங்கும் இம்மன்னர் மன்னன், தமது நூலில், ஏழை, விவசாயி, குடிசைவாழ்க்கையுடையவன் ஆகியவர்களுடைய வாழ்க்கைகள், நடவடிக்கைகள், எண்ணங்கள், வேடங்கள், அவர்கள் பேசும் சொற்கள் முதலியவற்றை அற்ப அமிசங்கள்கூடவிடாமல் மகிமைபெறக் கூட்டி சுயமாக அநுபவித்த தமது தன்மையை யாவரும் படித்து இன்புறுமாறு இயற்றி இருப்பது மிகுதியும் பாராட்டற்குரியது.

முன்னர் கூறிய நன்னயசோமகவியைப்போலவே இவரும் இயற்கைக்கவி. இவருடையவருணனை அற்புதமானதும், பேரானந்தத்தையுண்டாக்கத்தக்கதுமான சிறப்பினையுடையது.

மேற்கூறியவாற்றால், ஸ்ரீ கிருஷ்ணதேவ்ராயருக்கு ஆந்திரகவிகள் அனைவரினும், உயர்ந்த ஸ்தானத்தை அளிப்பதில் யாவரும் ஒருமுகப்படுவர். பதினாறும் நூற்றாண்டில் ஆந்திரமொழிவரலாற்றில் சுவர்ணயுகத்திற்கு அஸ்திவாரம் போன்றவரான இப்பேரரசர் தாம் ஆந்திர — கர்ணாட — கீர்வாணமாகிய மொழிகளில் வித்தியாநிதியாக விளங்குவதோடு, சுவர்ணயுககாரணமான மொழிவரலாற்று சமஸ்கரணத்திற்கும் எண்ணத்தின் சுதந்திரத்திற்கும் பேருராணிமயமான தீபம்போன்றவரென்றும்நாம் உறுதியாகக்கூறலாம்.

VI. மோகனாங்கி.

இப்பெயரிய நாரீமணி, ஸ்ரீ கிருஷ்ணதேவராயருடைய திருப்புதல்வி. கவிதாமணி; "மரீசிப்பிரணயம்" என்ற இனியதொரு நூலை இப்பெண்மணி இயற்றினள். ஸ்ரீகிருஷ்ணதேவராயர்காலத்து மொழியின் வளர்ச்சி, நோக்கத்தின் சுதந்திரத்திற் கலந்து பாஷைவரலாற்றுச் சமஸ்கிரணத்தை எச்சரித்து உயர்த்திய சமயத்தில், பாற்சங்கில் முலைப்பாலுடன் கவித்துவத்தையும் உடன்கூட்டி இப்பெண்ணணங்கின் திருவாயில் புகட்டினரோ! எனக்கூறினும் புதுமையாகாது. அக்காலத்தில் மொழி முன்னேற்றத்திற்கு அரியதும், இனியதுமான நூல்களை இயற்றிய புலவர்களுள், ஒரு பெண்பாலும் இருந்தாளென்பது மகிழ்வையூட்டும் ஓர் சுபச் செய்தியாகும்.

ஸ்ரீகிருஷ்ணதேவராயர் காலத்திற்குப்பின்னர் ஆந்திர மொழியின் வளர்ச்சி தளர்ச்சிபெற்றிருந்தது. கவித்துவமும் வர வர தேய்பிறையின் நிலவையொத்திருந்தது. ஆயின், அழிந்த அந்நிலையிலுங்கூட, காடாந்தகாரமான ஆகாய வீதியில், தாரகைதீபங்கள் மின்னிப் பிரகாசிப்பதுபோல் சில நூல்கள் ஆந்திரவுலகில் பிரகாசித்துக்கொண்டேயிருந்தன. அக்காலத்து விளங்கிய ஆந்திர ராஜகவிகள், அவர்களுக்கு முன்னர் விளங்கிய ராஜகவிகளைப்போலவே மிகுதியான பெருமையைப் பெற்றிருந்ததற்குக் காரணம், மக்கள் யாவரும் மொழிவளர்ச்சியில் பெரும் பற்றும், கண்ணுங் கருத்தும் கொண்டிருந்ததேயாம்.

முற்காலக் கவிகளைப்போல் பிற்காலக்கவிகள் மதிப்பும் மாண்பும் பெறுதிருப்பதற்கு, இவர்கள் மொழிவளர்ச்சியில் முயற்சியும், அன்பும் கொள்ளாதிருந்ததே காரணமாம். அவர்கள் மொழிவளர்ச்சி குன்றிய காலத்தும் தாய்ப்பாஷையை அலட்சியப்படுத்தாமல் இயன்றளவு தொண்டுபுரிந்ததே அவர்கள் புகழிற்கும் பெருமைக்கும் காரணராய், நம்மால் மதித்துப் பாராட்டுதற்கும் உரியராயினர்.

(தொடரும்)

மணமகன் தேவை.

17 அல்லது 18 வயதுள்ள, முதலியார் வகுப்பைச் சேர்ந்த அழகும், வசீகரமும் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. பெண் ஹையர்கிரேட் உபாத்திமை தொழில் பாஸ் செய்து உத்தியோகத்திலிருக்கிறது.

மணமகன் 25 வயதுக்குமேற்படாதவராய், முதலியார் வகுப்பைச்சேர்ந்தவராய், இதுவரை கலியாணம் ஆகாதவராய், மாதம் 30 ரூபாய்க்குக்குறையாத வருமானம் உள்ளவராய், சாதாரண அழகும், திடசரீரமும் உள்ளவராய் இருத்தல்வேண்டும். கடிதங்கள் இரகசியமாய் வைக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் ஒரு அணா ஸ்டாம்புடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதவும்.

M. S.

C/o "சித்தன்" பழனி.

மாதர் பகுதி.

சாரதாசட்டம்.

(தோழர், A. B. ஆதித்தர்.)

(138-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒரு வாலிபர் கூறுகிறார்:- "அவள் ஒரு வயதுக் குழந்தையாக இருக்கும்பொழுது நான் அவளை எடுத்து வைத்து விளையாடினேன். அப்பொழுது எனக்கு வயது 13. இன்று அவள் ஒரு குழந்தைக்குத் தாயாக இருக்கிறாள். எனக்கோ இன்னும் விவாகமாகவில்லை".

இந்த வாலிபர் கூற்றிலாவது ஒரு இளம் பெண் ஒரு குழந்தைக்குத் தாயாகியதாகத் தெரிகிறது. மற்றொரு நடப்பைக்கூறுகிறேன். ஆழ்வார்திருநகரியில் ஒரு பிராமணப் பெண் கல்வியிலும், சங்கீதத்திலும் தேர்ச்சிபெற்றிருந்தாள். இவளது கணவன் இண்டர்மீடியட் மாணவனாயிருக்கிறார். அவளுக்கு வயது 13-தான்; பிரசவ வேதனை தாங்காமல் இறந்து போனாள். இந்த அந்யாய மரணத்துக்குத் துக்கப் படாமலிருக்கமுடியுமா? பெற்ற தாய்க்கு ஆறுதலளிப்பது யார்? கண் முன்னாலேயே தோன்றி, கண் முன்னாலேயே அவள் மறைந்தாள். அப்பெண்மணி பிறந்ததும், வளர்ந்ததும், விவாகமானதும் புஷ்பவதியானதும், கர்ப்பம் தரித்ததும், பிரஸவ வேதனையில் இறந்துபோனதும் கண்டவொரு கனவுபோல்–சிறு பிள்ளைகள் வீடுகட்டி அழித்து விளையாடினதுபோல்–நீர்மேலெழுத்துப்போல்–சினிமாக் காக்ஷிபோல் மறைந்துபோனது. இத்தகைய பொல்லாத மரணம் எவர் மனதைத்தான் உருக்காது? யார்தான் அனுதாபப்படமாட்டார்கள்?

ஆ! பால்யத்தில் மணம் செய்வதைப்போல் பிறிதொரு மூடத்தனமில்லை. பால்ய மனைவியிடம் சுகம்பெற முடியாத

சிலர் மற்றொரு மனைவிகொண்டு வாழ்வதையும் — ஏனைய பெண்டிரிடம் இரகஸ்யமாய் இன்பந்துய்த்து வருவதையும் நாம் பார்த்திருக்கிறோம். இந்த அநாச்சாரங்களை எல்லாம் சட்டம், கட்டுப்பாடு இவைகளால் தொலைத்துவிடவேண்டும். "பால்யத்தில் மணம் செய்துகொள்ளும் பையன்களைச் சவுக்கால் அடிக்கவேண்டும்" என்றார் டாக்டர் சாப்ரூ.

"மனைவியோ, புருஷனோ மற்றவருக்குத் திருப்தி இல்லாத சமயம் சேர்க்கையை வற்புறுத்த உரிமையில்லை" என்று காந்திஜீ கூறியிருக்கிறார். அந்த நிலைமை வருவதற்கும் பால்ய மணம் நாட்டைவிட்டு அடியோடு ஒழியவேண்டும்.

பால்யமணம் மக்களை மிருகங்களாக்கிவைத்திருக்கிறது. பால்ய மனைவியானவள் தன் கணவனுடன் தனித்திருக்க விரும்புவதில்லை. ஏன்? அங்கு அவள் கன்னிகையாகக்கருதப்படுவதில்லை. மிருக வேட்கையைத் தணிக்கும் ஒரு இன்பக்கருவியாகக் கருதப்படுகிறாள். அவள் பயப்படுகிறாள்; அலறுகிறாள்; வெளிப்படையாகச்சொல்வதற்கென்ன? அவள் பலவந்தமாகப் புணரவும் படுகிறாள், அதன் மூலம் மரண காலம் நேரிடுகிறது. இவ்வாறு நாட்டில் நடப்பதாக பத்திரிகைகளில் வரும் செய்திகளையும், வெளிக்கு வாராமலே இருக்கும் சம்பவங்களையும் எண்ணுவதற்கு மனுஷ ஆயுள் போதாது.

சென்ற ஜனக் கணிதத்தின்படி பால்ய விவாகத்தின் பலனாக, நமது இந்தியாவில் விதவைகளின் கணக்கு வருமாறு:-

1-வயதுக்குட்பட்ட விதவைகள் 612.
2-வயதுக்குட்பட்டவர்கள் 498.
3-வயது முதல் 4-வயதுக்குள் 2868.
4-வயது முதல் 5-வயதுக்குள் 6758.
10-வயதுக்குள் 97½ ஆயிரம்.
15-வயதுக்குள் 3½ லட்சம்.
1-வயது முதல் 20-வயது வரை 1 கோடியே 75 லட்சம்.

நமது சென்னை ராஜதானியை மட்டும் எடுத்துப்பார்த்தால் விதவைகள் கணக்கு வருமாறு:—

5-வயதுக்குக் குறைந்த விதவைகள் 673.

5-வயது முதல் 10-வயது வரை 4072.
10-வயது முதல் 15-வயதுக்குள் 18323.

ஆக மொத்தம் 15-வயதுக்குட்பட்ட விதவைகளின் தொகை 23068.

இவ்வாறு ஒவ்வொரு மாகாணத்திலும் பல பதினாயிரக் கணக்காகவும், மொத்தத்தில் இந்தியாவில் பல லட்சக்கணக்காகவும் 15-வயதுக்குட்பட்ட விதவைகள் இருந்து கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார்களானால் இந்தநாடு எவ்விதந்தான் முன்னேற்றமடைய முடியும்? இந்தியாவில் ஒரு வயதுக்குட்பட்ட விதவைகள் 612. இதென்ன கொடுமை! கொடுமை!! கொடுமை!!! விதவை கொடுமை! கொஞ்சமாவது ஈவிரக்கமில்லாது இவ்வாறு விதவைகளின் கண்ணீருக்கு உட்பட்டிருக்குமட்டும் இந்தியாவுக்கு விமோசனமேயில்லை. இந்தியாவிலிருந்தே எத்தனையோ மேயோக்கள் தோன்றவும் கூடும். இந்த மூன்றரை லட்சம் விதவைகளும் அன்றாடம் எத்தனை வகை நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டுக் கஷ்டநஷ்டங்களில் நொந்து, கல்வியின்றி தங்கள் வாணாளை வீணாளாக்கி வரக் கூடுமென்பதை நினைக்கும்போது நெஞ்சம் குமுறவில்லையா? கொஞ்சமாவது பாழும் வைதீகர்கள் இதைநினையாது தினே தினே தங்கள் குடும்பத்திலும் இத்தகைய கண்றாவிகளைக் கண்டும் இன்னும் பால்யமணமே தேவையென்று கூறுவார்களாயின் அவர்களை என்னவென்றுசொல்வது? 'பால்ய மணம் செய்யவேண்டும்; பால்ய விதவையானால் மறுமணம் செய்யக் கூடாது". இதுதான் சட்டம் போலும்!—விதி போலும்!—சாஸ்திரம் போலும்! இதனினும் வேறு கொடுமையும் உளதாமோ?

"குழந்தைவிதவை" என்னும் பதங்களே ஒன்றோடு ஒன்று பொருத்தமற்றிருக்கின்றது. குழந்தை எவ்வாறு விதவையாக இருக்கமுடியும்? வடஇந்தியாவில் பஞ்சாபியர்களும், சீக்கியர்களும் தங்கள் பெண்களுக்கு 16, 17 வயதுக்குள் மணம் செய்வதில்லை. ஆதலால் இதர சமூகத்தாரைவிட ஆட்களும் ஆஜானுபாகுவாக இருக்கிறார்கள். தென்னிந்தியாவிலும் பால்ய மணம் செய்யாத சமூகத்தாரே பலசாலிக

ளாக இருக்கிறார்கள். வாலிபத்திலேயே மணம் செய்வதால் இவர்களுக்குள் பாலிய விதவைகள் இல்லை. இந்நிலை மற்ற மக்களும் பெறவேண்டாமா?

திரு. சாரதா அவர்களின் சட்டத்தால் இனி நமது நாட்டில் பால்ய விதவைகளின் கண்ணீருக்கு இடமில்லை. இவ்வாறு 15 வயதுக்கு உட்பட்ட விதவைகள் ஒன்றுகூட இருக்கமுடியாது. இந்தியா சட்டசபை எதைச்செய்திருந்தாலும், எதைச்செய்யாமலிருந்தாலும் சாரதா பால்ய விவாகத் தடைச் சட்டமாகிய இந்த ஒரு காரியத்தை அது செய்தது அதற்கு என்றுமழியாப் புகழைக்கொடுக்கும். கான்பரன்ஸ்களிலும், காங்கிரஸ்களிலும் நூற்றுக்கணக்கான தீர்மானங்களைச் செய்வதால் ஏற்படுவதைவிட இந்த ஒரு சட்டமானது தேச முன்னேற்றத்திற்கதிகமாக உதவி அளித்திருப்பதாக எந்நாளும் நிலைநிற்கும். இவ்வித சட்டமானது இந்த தேசத்தை விடுதலைக்குப் பக்குவப்படுத்தும். இந்த ஒருகாரியத்தினாலே இந்தியா சட்டசபை தன்னுடைய உபயோகத்தைக் காட்டிக்கொண்டுவிட்டது. உலகமுள்ள அளவும் சாரதாவின் புகழ் நிலை நிற்கும். அவர் நீடூழி வாழ்க!

அரசாங்கத்தார் இதுவிஷயத்தில் தவக்கம் காட்டாமல் அமுல் நடத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள், அது பொறுப்புள்ள அரசாங்கத்தாரது கடமையுமாகும். திரு சாரதா சட்டத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதில் சாத்தியமாகாக் காரியமாக ஜனங்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொண்டிருக்காமல் முஸோலினி, முஸ்தபா கமால் பாஷா போன்றவர்களைப்போல் கடுமையாகவும்—கண்டிப்பாகவும் அவசியமாக முன்னின்று நடத்திவைக்கும்படியாக அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கின்றோம்.

(N. B.) சித்தனுக்கு கடிதம் எழுதும் அன்பர்கள் தங்கள் சந்தா நம்பரைத் தவறாமல் எழுதவேண்டும். நம்பர் குறிக்கப்படாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

வைதவ்யச் சிந்து!

(புதுவை, R. S. ராஜலக்ஷிமி)

(நொண்டிச்சிந்து)

புகலொணாப் புவிமீதே விதவையர்
புலம்பி மனதுமிக்க கலங்குவதை
மிகவே எடுத்துரைக்க இந்த
மேதினி மீதினிலா கிடுமோ?

இளமை வயதினிலே பெண்களை
இடறி வழிநடக்கும் கிழவனுக்கு
நலமாய் மணமுடிப்பார் ஒருஆண்டு
நடந்திடுமுன் கிழவன் மடிந்திடுவான்

அறியாப் பருவத்திலே அவர்களை
அலங் கோலமாக்கிமனந் தியங்கச்செய்வார்
பருவ வயதுதனில் வாழ்நாள்
பாழானதே யென்று பரிதவிப்பார்

வைதீகப்பித்து வுடையோர் அவர்களை
வைதவ்யக் கொடுமைசெய்து கைதியாக்குவார்
கட்டுப்பாடுகள் செய்வார் வாசற்படி
கடந்திடக் கூடாதென்று ஆக்கினைகொள்வார்

பட்டியில் ஆடுகளை அடைப்பதுபோல்
பாவையர் தங்களை பாதுகாப்பார்
மனைவிதா னிறந்துவிட்டால் கணவன்
மறுமாத மாகுமுன்னே மணமுடிப்பான்

தனியாய் பெண்களுக்கோர் விதியென
தரணியின்மீ திலேயோர்சட்டமு முண்டோ?
இனியா கிலுமிதனை அறிந்துமே
இயற்றுவீர் மறுமணம் தயக்கமின்றி

நினையாச் சம்பவங்கள் கண்முன்
நிகழுமுன் விதவையர் அகங்குளிர
தேச மீதினிலே விதவையர்க்காய்
சேவை செய்குவீர் "சித்தன்" நேயர்களே.

அகத்தியர் குணவாகடம் 3000.

(சாமி விருதை, சிவஞான யோகிகள்)

(142-ம் பக்கத் தொடர்ச்சி.)

தெரியுமடா சதைகள்தான் பிருவாய்க் காணில்
தெளிந்ததொரு மூளையில்தான் இரத்தங்கட்டி
அறிந்துநீ சுடுகைத்துப் பத்து மிட்டு
அப்பனே இரத்தமதைக் கரையச் செய்வாய்
முறிந்ததுபோல் சதைகள்தான் தளர்ச்சி கண்டால்
மூளையது கெட்டுப்போ யிருக்கு தென்று
தெரிந்ததற்கு இரத்தத்தைச் சுத்தி செய்ய
திறமான அயமுதலாய்க் கொடுத்தி டாயே. (139)

கொடுத்திடவே வியாதிதான் நாட்சென்று விட்டால்
கொதிப்பான எட்டியுட உப்பை யீய்ந்தால்
சடுத்தமுடன் தீருமடா வாத நோய்கள்
சதிரான வாதபெண்ணெய் விடமுட்டி தேய்ப்பாய்
அடுத்ததொரு அக்கினியாம் செந் தூரத்தை
அநுதினமுந் தின்றுக்கால் வியாதி தீரும்
மடத்தனமாய் இருந்தாக்கால் வியாதி கொல்லும்
மகத்தான பச்சையென்ற வாத மாமே. (140)

இளம் பிள்ளை வாதம்.

வாதமடா இளம் பிள்ளை வாதங் கேளாய்
வன்மையுள்ள கால்களதை வற்றுப் போகும்
நீதமுடன் குழந்தைகட்கே யிந்த ரோகம்
நிச்சயமாய்க் காணுமென நினைவாய்ச் சொல்லு
போதமுடன் ஆரம்ப மாகும் வேளை
பொலிவான வாதங்கள் கண்டுமே தான்

பாதமதில் திமிருடனே சொரணை கெட்டு
படிப்படியாய் உணர்ச்சி கெட்டுப் போகும் பாரே.(141)

போகுமடா மூத்திரப்பை குதம் இவைகள் தானும்
முக்கியமா யசைவற்றுப் போகு மய்யா
ரோகியைப்போல் மல்லாக்காய்ப் படுத்துக் கொண்டால்
நிச்சயமாய்ப் பிரஷ்டத்தில் புண்ணுண்டாகும்
பாகமுடன் மூத்திரந்தான் இறங்காமல் கொஞ்சம்
பக்குவமாய்த் தாமதித்து இறங்குமாகில்
வேகமாய் நீர்போலே நீரி றங்கி
விளக்கமுள்ள துர்வாசனை நெடியுண் டாமே. (142)

உண்டாகும் ராத்திரியில் சதைத்துடிப்புக் கண்டு
உத்தமனே ரோகியைத்தான் அலட்டிக் கொல்லும்
பண்டான முள்ளந்தண்டுக் கொடிக் கேனும்
பக்குவமாய் அதினுடைய சவ்வுக் கேனும்
கண்டிதமாய் வியாதிகண்டு இந்த ரோகம்
காசினியிலுண் டாகுமென்று கருதிச் சொன்னேன்
துண்டான காயங்கள் படுவ தாலும்
தொல்லுலகில் இந்த நோய் வருகும் பாரே. (143)

பாரேநீ இந்தநோய்க்கு மருந்து செய்ய
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
சீரேநீ கொடிக்கேனும் அதின்சவ்வுக் கேனும்
சிறப்பான தாபனத்தின் குறி தனக்கு
நேராக உணர்ச்சிகண்டு மருந்து செய்வாய்
நிச்சயமா யதின்குறிகள் தெரிந்து கொண்டு
வாரான சதைகளுக்குச் செல்லு கின்ற
வன்மையுள்ள நரம்புகளிலதிக ரத்தங் காணே.
(144)

கண்டாக்கால் அதிர்ச்சியுடன் இசிவு கண்டு
கதிப்பான கொருக்குவலி சதையடைத்துக் கொள்ளல்
கண்டிதமாய் ஆண்குறியும் விம்மிக் காணும்
கதிப்பான பரிசநாப்புக்கு அதிர்ச்சி கண்டால்

வண்மையாய் நமைச்சலுடன் சூடு மேறும்
வளமையாய்க் குளிர்ச்சியுடன் உணர்ச்சி யேறும்
பண்டிதனே மூத்திரத்தில் நெடியுண் டாக்கும்
படுக்கையில்தான் விரணமுதல் பலவுங் காணும்.(145)

காணுகின்ற நோயதுதான் தீர வேண்டி
காசினியி லநேகவித மருந்து செய்வாய்
பூணுகின்ற அயச்செந்தூரம் லிங்க மாத்திரை
புனிதமுடன் எட்டியுட உப்பு யீய்ந்தால்
தோணுமடா உணர்ச்சிமுதல் இரத்தோட் டங்கள்
தொலையாத வாதமெல்லாந் தொலைந்து போகும்
பேணிவரும் அர்த்தமுக வாதந் தானும்
பிறந்துவரும் வகையதனைப் பின்னால் காணே.(146)

அர்த்த முக வாதம்.

பின்னிவரும் அர்த்தமுக வாதம் நேர்மை
பிடிக்கும் வகைதனைச் சொல்வேன் பர்ராய்
உன்னித மாய்முகத்தில் பாதிநோய் கண்டு
உறுதியுள்ள முகக்களையைக் கெடுத்துப் போடும்
சென்னியுள்ள நரப்புக்கு வியாதி காணில்
சிறப்பான இந்த நோய் வருகு தென்று
நன்னயமாய்ச் சொல்லிவிட்டோம் உலகத்தோர்க்கு
நலமறியக் குணமதனை நிகழ்த்துவேனே. (147)

நிகழ்த்துவேன் கண்ணிமைகள் மூட அய்யா
நிச்சயமாய் வருத்தமடா இருக்கு யப்பா
மகத்துவமாங் கன்னமது தளர்ந்து தொங்கி
மகத்தாகக் கீழி றங்கிக் கொள்ளும்
ஜெகத்தினிலே இதனாலே பயமோ இல்லை
செப்புகிறேன் குளிர்ச்சி பற்சொத்தை யாலும்
அகத்தில்வாழ் குழந்தைக்குச் செவிபுண் ணாலும்
அப்பனே இந்தநோய் அணுகும் பாரே. (148)

நடுக்கு வாதம்.

நோயாக நாடுகின்ற நடுக்கு வாதம்
நோய்தானும் வந்தணுகும் நேர்மை கேளாய்
பாயான பரிசத்தின் நரம்புக் கப்பா
பக்குவமாய் வியாதிகண்டு பின்பு கேளாய்
தேயாத விரலுக்கேனும் சிரசுக் கேனும்
தென்படுமே முதலில்தான் நடுக்கு மப்பா
ஓயாமல் பின்புசர் வாங்க மெல்லாம்
உத்தமனே வியாபித்து நடுக்க மாமே. (149)

நடுக்கங்கள் தீருதற்கு மருந்து கேளாய்
நன்மையுள்ள அயச்செந்தூர முதலாயுள்ள
சடுத்தமுடன் சரீரத்திற் பெலமே கொள்ளத்
தக்கதொரு ஊட்டமுர்நீ கொடுத்து வந்தால்
பிடுத்தங்கள் முதல்யாவும் விட்டுப் பெலனேவந்து
பிறகாலே நடிக்கலுந் தானற்றுப் போய்க்
குடித்தனத்தில் வேலைசெய்யப் பெலமுண் டாகிக்
கொற்றவனா யாவன்தான் குறிகண் டாயே. (150)

காக்கைவலி.

குறிப்பான காக்கைவலி ரோகந் தன்னை
குறிப்பறியச் சொல்லுகிறேன் குணத்தைக் கேளு
மறைப்பில்லாக் குறியின்றி யிந்நோய் காணும்
மக்களே காணுதற்கு முன்னால் கேளு
தெறிப்பாகக் கீச்சுக்குரல் போடக் கண்டு
திறமாகக் கூப்பிடுவா னப்போ தய்யா
மறிப்பவன்போல் பூமிதனில் கிடப்பான் பாரு
மகத்தான காக்கைவலிக் காரணம் பாரே. (151)

(தொடரும்)

மருந்து செய் பகுதி.

சகல விஷ வீக்கங்களுக்கும் பற்று.

தும்பை, துளசி, எருக்கு வேலிப்பருத்தி மொசு மொசுக்கை, அமுக்குரா, புண்ணாக்குப் பொடுதலை, கோவை, சங்கன், உறிகட்டி, காரந்தழை, கிழவன் தாடி, கற்பூரவெற்றிலை, நொச்சி இவைகளின் தழைவகைகளை இடித்துச் சாறு பிழிந்து, கொதிக்கவைத்து அரைவரிசை பதத்திற்கு வருகையில் கடுகு, சுக்கு, மிளகு வகைக்குப் பலம் அரைக்கால், ஆனைத்தெள்ளு பருப்பு 2, கழற்சிக்காய் பருப்பு 4, உளுந்து பலம் $\frac{1}{8}$. இவைகளைப் பொடிசெய்து போட்டு 5-கோழிமுட்டை வெண்கருவைவிட்டு கிளறி கஞ்சி ஆடைப் பதம்போல் பார்த்து எடுத்து வீக்கம்பரவி இருக்கும் இடங்களில் பூசவும்.

ஈயச்செந்தூரக் களிம்பு.

ஈயச்செந்தூரம் 3-ரூ எடை, ரசகற்பூரம் $\frac{1}{2}$-ரூ எடை, மிர்தார்சிங் ரூ எடை $\frac{1}{2}$. இவைகளைச்சேர்த்தரைத்து தேங்காயெண்ணெய்யோடு கலந்து அடுப்பிலேற்றி எடுத்து களிம்புப் பதத்திற்கு வந்தவுடன் இறக்கி குளிர்ச்சியாகிறவரை துழவிக்கொண்டே இருந்து பின்பு எடுத்து டப்பிகளில் வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:— காயம், இரணம், கொப்பளங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம்.

வங்க பஸ்பம்.

கருஈயத்தைச் சட்டியிலிட்டு கோவையிலைச்சாறுவிட்டு சிவக்க வறுத்து எடுத்து கல்வத்திலிட்டு ஷை சாறுவிட்டு மூன்று சாமம் அரைத்து பின்பு துத்தியிலைச் சாறுவிட்டு 3 சாமம் அரைத்து, வில்லை தட்டி காயவைத்து சேலைமண் செய்து 25-எருவில் புடமிடவும்.

உபயோகம்:— க்ஷயம், இருமல், இளைப்பு முதலிய கப ரோகங்களுக்கும், வெள்ளை, வெட்டை முதலிய ரோகங்களுக்கும் கொடுக்கலாம்.

அகஸ்தியர் கும்மி.

144-ம் பக்கத்தொடர்ச்சி.

சுரம்.

ஆவின் மோரிலே புளியாரை இலையை
அவித்து உலத்திப் பொடி யாக்கி
பாவினையாகத் தேனிலருந்தச் சுரம்
பறக்கும் கும்மி அடியுங் கடி. 8
சீந்தில் விலாமிச்சை பற்பட்கம் கோரை
சிறுதேக்கு சந்தனம் சித்ர மூலம்
திப்பிலி கூட்டிக் கியாழமிடவே சுரம்
தீருமெனக் கும்மி யடியுங் கடி. 9

குன்மம்.

ஓமம் மஞ்சலவணம் உள்ளி
ஒக்கவே தாயுருவிக் கடுக்காய்
சாமமரைத்துப் பழத்திலிடக் குன்மம்
சாந்தமெனக் கும்மி யடியுங்கடி 10
பொன்முசுட்டையீ சுரவேர் மூலம்
பொற்றுது தின்னுப்பாழை யிந்துப்பு
நாரத்தங்காய்ச் சாற்றிலரைத்திடக் குன்மம்
நசிக்கும் கும்மி அடியுங்கடி. 11

வாதம்.

மஞ்சள் வசம்பு உள்ளி கடுகு நல்
மருத்தோனிக் கிழங் குடனே
அஞ்சுஞ் சதுர்க்கள்ளிச்சாற்றில ரைத்திட்டு
அன்பாய்க் கும்மி யடியுங்கடி 12
அரைத்து நல்லமுழங்கால் வாதத்தில்
அக்கரையாகவே பூசி வந்தால்
தூரத்திவிட்டிடும் நோயதனை யெனத்
தெரிந்து கும்மி யடியுங்கடி 13

பித்தம்.

சீரகஞ் சுக்குடன் வேப்பீர்க்கு நல்ல
சீந்தில் பற்படகங் கொத்தமல்லி
சேர்த்து நீர்விட்டுக்காய்ச்சிக்குடி பித்தம்
சேராது கும்மி யடியுங்கடி. 14

மூலிகைப் பகுதி.

மாதுளை

வாய் நீரூறல் கசப்பு வாந்தி விக்கல் மந்தமிகக்
காய் வெப்பநெஞ்செரிவு காதடைப்பு—வோயா
மயக்கமுந் தீர்ந்துவிடு மாதுளம் பழத்தாற்
றயக்க மனத்தே மொழியே சாற்று

(பதார்த்தகுணசிந்தாமணி)

இச்செடியின்வேர் கிருமிகளைக் கொல்லக்கூடியது. இதற்கு பேதியாகிற குணமில்லாததால் இக்கஷாயத்தை 3-அவுன்ஸ் வெறும் வயிற்றில் கொடுத்து அரைமணிநேரம் பொறுத்து பேதிக்குக்கொடுத்தால் கிருமிகள் வெளியேறி சுகமாய் பேதியாகும். சுகபேதிக்குக் கண்டகண்ட மருந்துகளைக் கொடுப்பதைவிட சிற்றாமணக்கெண்ணெய் கொடுப்பது நலம். எண்ணெய் சாப்பிட மனமில்லாதவர்கள் C. M. சாமி சுகபேதி மாத்திரையை சாப்பிடுதல் நலம்.

மாதுளம்பிஞ்சை அரைத்து தயிரில் கலக்கிக் கொடுத்தால் வயிற்றுக்கடுப்பு, மலத்தில் சீதம் இரத்தம் விழுதல் குணமாகும். அதிசார ரோகங்களுக்கும் கொடுக்கலாம்.

மாதுளம் பூவை பசும்பாலில்போட்டுக்காய்ச்சிச் சாப்பிட்டால் பித்தவாந்தி, வயிறுளைதல் சாந்தமாகும். உஷ்ணம் தணியும். ரத்தபுஷ்டி, பலம் உண்டாகும். பழத்தை உட்கொண்டால் நெஞ்செரிவு, காதடைப்பு, நீங்காத நாவரட்சி, தாகம், நீர்க்கடுப்பு போகும். வீரியவிர்த்தி உண்டாகும்.

மாதுளம் பழத்தோலை உலர்த்தி இடித்து பவுடர் செய்து வெந்நீரில் கலந்து வாய்ப்புண்ணுக்கு வாய் கொப்பளிக்க உபயோகிக்கலாம்.

நாடகப் பகுதி.

நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(152-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 4] [களம் 3

முத்துமாலை. மோகனமாலை,
காலம்—மாலை. இடம்—உத்தியானவனம்.

முத்துமாலை:— அடி! சகி! நமது தோழி சுகுணசுந்தரியின் செயலினை கவனித்தாயா? அவள் அல்லலுற்று அழுங்குகின்றனள்; ஆவி சோருகின்றனள். மெல்லிய இதழ்கள் உள்ள பல்லவங்கள் தீயுமாறு பாயலிற்படுத்திருக்கின்றனள். மிக்க பதைபதைக்கின்றனள். இது என்னடி கொடுமை?

மோகனமாலை:— அடி! தோழீ! அவள்தன் கண்கள் மிக்கப்புனல் பெருகி மையினை அழித்தன! அவளது கைகள் யாழினை மறந்தன. அவளது மார்பகம் அணிகள் துறந்தன. அவளது மெல்லிய கூந்தல் மலர்கள் ஒழித்தன. இதனினும் கொடுமை வேறுளதோ?

முத்துமாலை:— ஐயோ! பாவம்! இவையாவும் அப்பாழும் மதயானை எடுத்ததால் விளைந்த பொல்லாங்கன்றோ! அவளது பயத்தினைப்போக்கி அவளது பூர்வ நிலைக்குக் கொண்டுவரும் ஆற்றலுள்ள மாந்திரீகரும் நம் நாட்டில் இல்லையா? அவ்வாறாயின் அத்தொழிலில் பிரசித்தபெற்ற சேரநாட்டிற்கேனும் ஆளனுப்பி தக்க மந்திர மூர்த்திகளைத் தருவித்தல் கூடாதா?

மோகனமாலை:— அடி! சகி! பயந்த குணமாயின் அவ்வாறு செய்தல் உசிதமே. அதுவோ பயங்காரணமாய் விளைந்ததன்றே.

முத்துமாலை:— தோழீ! பின்னை அது பித்த நோயோ? அவ்வாறாயின் அதற்கேற்ற ஔஷதங்களும், தைலங்களும் தயாரித்தல் கூடாதா? நம்மரண்மனை வைத்தியர் கொடுக்கும் மருந்துகளோ அந்நோயைக் கண்டித்தபாடாயில்லை.

மோகனமாலை:— அடி! முத்துமாலை! அது பேய்க்குணமுமல்ல; பித்த நோயுமல்ல; அது காமநோய். இந்நோயோ கருத்திற்கிசைந்த கண்ணாளனது சேர்க்கையாலன்றி நீங்கற்பாலதன்று.

முத்துமாலை:— ஏதடி! மோகனம்! இதிலென்னடீ கஷ்டம்? அவள் அத்தை மகனோ அகத்திலிருக்கின்றனன். சுபதினம் ஒன்று பார்க்க, விவாகத்தை முடிக்க, அவள் தன் நோயினைப் போக்குக. மகள் தன் மாறுபாட்டின் காரணத்தைத் தாயிடம் சொல்லின், தாய் தந்தையிடம் சொல்லி எல்லாம் முடிப்பளன்றோ!

மோகனமாலை:— அம்மணீ! அவனல்லடி அவள் தன் மனோஹரன். அப்படி இருந்தாலன்றோ நீ சொன்னபடி முடிக்கலாம்.

முத்துமாலை:— சகீ! பின்னை யாவனடி இவள் தன் காதலுக்கேற்ற குணமும், குலமும், நலமும் உள்ளவன்?

மோகனமாலை:— அன்பே! அவன் குலக்குறையுள்ளானேனும் குணக்குறை இல்லான். செல்வத்திற் சிறியானேனும் வீரத்திற் பெரியான். மதயானை எடுத்த காரணமாய் அவன் வசப்பட்டாள்; ஸ்பரிச சுகமுற்றாள்; தன் மனமுற்றும் அவனிடம் ஓடவிட்டாள்; அவன் எண்ணமதாகவே ஏக்கமுற்றாள்; உண்மையை நம்மிடம் நவில நாணமுற்றாள்; தன் காதலனைப் பொதிந்துவைக்கும் ஆற்றலற்றாள். நீ இந்த உண்மையறியாது மயங்குகின்றனை.

முத்துமாலை:— என்னடீ! பொறியடக்கும் வலிமை வாய்ந்த புண்யவதியின் மனதையும் கொள்ளைகொண்ட கள்வனை நீ அறிவாயோடீ! உன்னிடம் மாத்திரம் அவள் எடுத்து ஓதினளோடீ?

மோகனமாலை:— அடீ! தோழீ! அவள் எடுத்தோதவும் வேண்டுமோ? பாம்பின் கால் பாம்பறியாதா? யானறிவேன்

அவனை. யானறிந்ததாய் அவளறியாள். அவள் எண்ணம் அவ்விஷயத்தை ஒருவரறியாது மனதுள் பொதிந்து வைத்திருப்பதாக.

முத்துமாலை:— அடீ! என் அருந்தோழீ! நீ வேறு நான் வேறல்லவே. நம்மிருவருள் உடல் வேறாயினும் உயிர் வேரன்றே. அப்படியிருக்க நீ ஏன் தெரிந்தும் என்னிடம் உரைத்தாயில்லை.

மோகனமலை:— அடீ! காதலி காதலர் அந்தரங்க விலக்ஷணம் காதலை பிறரறியாது மறைக்க முயல்வதேயாம். அவர் படும் விரக நோயதனை ஊக்கத்தோடு ஆறாயினன்றி யாராலும் அறிதலரிது. பிறர் இரகசியம் யான் பகருவது அழகோ? அதுபற்றி உன்னிடமும் மறைத்தேன். அவர்களோ அதனை வெளியிட நாணுவர். சுகுணசுந்தரியும் சுபாவத்தை அநுசரித்து மறைக்கின்றனள்.

முத்துமாலை:— தோழீ! அப்படியாயின் நாம் உணர்வதெப்படி? அவள் தன் காதலனையடையும் வழி புரிவதெப்படி? நமக்கோ அவள் தன் க்ஷேமமே குறிப்பு. ஆதலின் நாமன்றோ உண்மையையுணர்ந்து ஈன்ற தாய்க்கு உறைத்தல் வேண்டும். தாயவள் தந்தைக்கு உரைப்பாள்; திருமணம் முடிப்பாள். பின்னர் காதலன் காதலியர் துன்பமகலும்.

மோகனமாலை:— அடீ! ஊமத்தங்காயைக் கொடுத்து உள்ளத்தை வாங்கவேண்டும். இன்மொழி மாத்திரமா உண்மையை வெளியாக்கும்.

முத்துமாலை:— அவளுக்குக் காதல்தந்த கண்ணாளன் யாரடி?

மோகனமாலை:— சகீ! அவன் வீராதி வீரனடீ! நற்குணக் குன்றமடீ! காமனையும் கந்தவேளினையும் அழகினில் வென்றவனடீ! நம் தேயச் சேனாநாயகனடீ! சுந்திரானந்தர் வளர்த்த உத்தம நாகானந்தனடீ!

முத்துமாலை:— என்னடீ! நீ கூறுவது விந்தையாய் இருக்கிறது. குலப்பெருமை சற்றுமில்லாத நாகானந்தர் மீது பாண்டியர் குலக்கொடி தாவித்தழுவ முயல்கின்றதென்றால் உலகம் நகையாதா?

மோகனமாலை:— அடீ! யார் தூஷித்தாலென்ன? யார் பூஷித்தால் என்ன? நல்லன்னம் நற்றாமரைக் கயத்திலன்றி வேறு குளம் நாடுமோ? நாகானந்தரை அவள் காதலித்தது இயற்கையே. அவள் உலகின் விருப்பு வெறுப்பினைக்கருதாள்

முத்துமாலை:— உலகினர் உற்றுப் பெற்றார் ஒவ்வா விடின் இவள்தன் மனோரதம் நிறைவேறுவதெப்படி?

மோகனமாலை:— தோழீ! விதிவலியினை அறிபவரும் உளரோ? எல்லாம் ஊழ் கூட்டுவிக்கும்.

முத்துமாலை:— அவள் நாகானந்தரைக் காதலிக்கின்றாள் என்பதை அவள் வாய் மொழியால் வருவிப்பாயா?

மோகனமாலை:— அவ்வாறே வருவிக்கின்றேன் வா. அவள் சென்றுள சந்திரகாந்த மேடை செல்வோம்.

(இருவரும் மறைதல்.)

அங்கம் 4] [களம் 4

சுகுணசுந்தரி, முத்துமாலை, மோகனமாலை,
சுந்திரகுமாரன், நாகானந்தன்.
காலம்—மாலை. இடம்—உத்தியானவனம்.

(சுகுணசுந்தரி சந்திரகாந்த மேடையில் சயனித்திருத்தல். முத்துமாலை, மோகனமாலை இருபுறமும் வீற்றிருத்தல், நாகானந்தன் ஒரு புதரினும், சுந்திரகுமாரன் மற்றொரு புதரிலும் மறைந்து நிற்றல்)

முத்துமாலை:— அம்மணீ! சுகுணசுந்தரி! நாங்கள் தாமரையிலைகொண்டு வீசுவதானுண்டாகும் மந்தமாருதமானது உனக்கு சற்று ஆறுதலைக்கொடுக்கின்றதா?

சுகுணசுந்தரி:— அடி! கண்மணி! நான் என்னடி சொல்வது? நீங்கள் என் பொருட்டு எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்கோ அளவில்லை. நீங்கள் வீசாநிற்கும் தண்ணென்ற தாமரையிலையினின்றும் வரும் மாருதமோ அனல்போன்று என் அங்கமெங்கும் தகிக்கின்றது. இத்தாபத்தால் அணிந்துள்ள முத்தாரமும் சுன்னமாகின்றது. உங்களால் பரத்

தப்பெற்றுள்ள மல்லிகை மலர்களும் கருகி அங்கத்தை வாட்டுகிறது. யான் என் செய்வேன்?

மோகனமாலை:— மனோஹரீ! சூரியாஸ்தமனமாகயிருப்பது கருதி குவிந்துள தாமரை மலர்களைக்கொண்டு பன்னீர் உகுத்து நறுமணத்தோடு உன் அங்கமெங்கும் கொடாநிற்கும் தோதகமானது சற்றேனும் சிரமபரிகாரமாயுளதா?

சுகுணசுந்தரி;— அடீ! மோகனம்! என்னடீ சொல்வேன் என் சிரமத்தினைப்பற்றி. மூட்டிய நெருப்பின் செந்தழலன்ன இச்செந்தாமரை என் அங்கமெங்கும் தகிக்கின்றதடீ.

முத்துமாலை:— என் அன்பே! நீ அடைய இருக்கும் அரச செல்வத்தால் பொறாமை கொண்ட உன் சுற்றத்தாரில் யாவரேனும் மாந்திரீக வித்தையால் உன் அங்கத்தை எரித்துக் கொல்வதின்பொருட்டு யாதேனும் துஷ்டதேவதைகளை ஏவியுளரோ? அதுபற்றித்தான் இவ்விதத் துன்பத்திற்கு ஆளாயினையோ?

சுகுணசுந்தரி:— அடீ! பேதாய்; பாண்டியர் குலங்காக்க அவதரித்த மீனாம்பிகையின் கடாக்ஷ வீக்ஷண்யம் எங்கள் குலத்துள்ளவரை ஏவலும் என்பால் நாடுமா? ஏன் சந்தேகம்?

மோகனமாலை:— அன்பே! சமணர்கள் போன்ற க்ஷுத்திரத்தில் வல்லவனொருவன் மந்திரவித்தையால் எரிநோயினை உனக்கு ஆக்கினனோ?

சுகுணசுந்தரி:— அடி! மடமே! பஞ்சாக்ஷரத்தின் பெருமையறியாயா? அதன் இலக்ஷியப் பொருளே சோமசுந்திர வடிவந்தாங்கி எங்கள் குல மருகனாயிங்கு திருக்கோயில் கொண்டிருக்க க்ஷுத்திரமென்பால் தலைகாட்டுமா?

முத்துமாலை:— தாயே! இது பித்த நோயல்ல; நோய் ரூபமாய்ப் பிரயோகித்த க்ஷுத்திரமன்று. பின்னை என்ன? இது காம நோயே—அதுதான் தண்ணென்றிருப்பவற்றை வெய்யதாக்கும்; மேனியை வாட்டும்; தனிமையை ஆக்கும்; அன்பினரைப் பிரிக்கும்; துயில்நீக்கும்; ஊண் சுருக்கும்; ஆடை அணிகளில் வெறுப்பாக்கும். இவையெலாம் உன்பாலுள.

சுகுணசுந்தரி:— என்னடீ! மெல்ல மெல்லப் பரிகசிக்க ஆரம்பித்துவிட்டாய். இது என் நோயாயிற்றான் என்ன?

நானோ நோயினுக்கிடந்தந்துவிட்டேன். அந்நோயினைப்போக்கும் வழியறியாது தடுமாறுகின்றேன். அதுபற்றி யான் வந்த தனுபவித்தன்றோ தீருதல் வேண்டும்.

மோகனமாலை:— அரமணி! வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்யின்பொருட்டு வருந்துவாரும் உளரோ? உனக்கென்றே நிச்சயித்திருக்கும் உன் அத்தை மகன் அருகிருக்கத் துன்புறுவானேன்? உன் விரகத்தினை உன் அன்னைபால் எடுத்தோதுவோம். அவர் உன் தந்தைபால் எடுத்தோதுவர். நற்றினம் பார்த்து விவாகம் நடக்கும். மதனனம்பினைப் பொடியாக்கலாம். அவனுலாய நோயெலாம் போக்கலாம்.

சுந்திரகுமாரன்:— (தனிமையில்) அடீ! மோகனமாலா! நீ சொன்னபடி என் விவாகம் நிர்விக்கினமாய் முடியின் நின் நாமத்திற்கேற்ற மோகனமாலையொன்று உனக்கு யான் பரிசாயளிப்பேன். இதோ அவள் பகரும் விடையினைக் கவனிக்கின்றேன்.

சுகுணசுந்தரி:— தோழீ! என் காதல் அவ்வளவு சுளுவில் நிறைவேறுவதாயில்லை. என் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் மனங்களிக்க நடக்க எண்ணி யான் என் அத்தை மகனைக் காதலிக்க மெல்ல மெல்லப் பழகிவந்தேன். அப்பழக்கம் என் மனதில் வேரூன்றிப் பற்றியதாயில்லை. இடையே சோணாட்டு யுத்தம் வந்தது. யுத்த வரலாறு கேட்கக்கேட்க சொற்பப் பற்றுமற்றது. காதலெனுங்கொடி அதற்கேற்ற பற்றுக்கோடில்லாது அங்குமிங்கும் நுடங்கி நின்றது. பின்னர் இந்திரன் விழா வந்தது. அது பற்றிப்படர்வதற்கேற்ற விருக்ஷம் முற்பட்டது. அதனைப் பற்றிப்படரும் அவா மேலாயது. பற்றற்கேற்ற வசதி ஏற்பட்ட பாடில்லை. அது பற்றி உள்ளம் உடைந்தது; காதல் நோய் ஆயது; தவித்துத் தயங்குகின்றேன். மற்றென் செய்வேன்?

(தொடரும்)

தேவை.

சித்தன் பத்திரிகை விற்பனைசெய்யவும், சந்தாதாரர்கள் சேர்க்கவும் முக்கிய நகரங்களுக்கு பொறுப்பும், செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். ஒரு அணா ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

மானேஜர், "சித்தன்", பழனி.

சரியான விடை பழனி, "சித்தன்" ஆபீஸில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

ஆசிரியன் போட்டி.

நெ	வார்த்தை	குறிப்பு
1	—ரு	ஆசிரியர்
2	வயி—	தொப்பை
3	அம்—	மாதா
4	நா—	சுனகன்
5	பூ—	நிலம்
6	நா—	மூக்கு

ரொக்கப்பரிசு

ரூ. **750.**

முதல்பரிசு ரூ. **500.**

இரண்டாவது ரூ **250**

பிரவேசக்கட்டணம்

விடை 1-க்கு அணா 0-2-0.

முடிவு தேதி **24-4-36.**

— இடங்களில் விட்டிருக்கும் எழுத்துக்களை பூர்த்திசெய்து விடை 1-க்கு 0—2—0 வீதம் (M.o. ரசீதுடனும் லேபிலும் 0—8—0 வரை அனுப்பலாம்) இப்போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது. போட்டிக்காக அனுப்பின பணம் வாபீஸ் செய்யமுடியாது. கூட்டல்போட்டி சரியானவிடையும் பரிசுப் பணமும் பரிசு பெற்ற நேயர்களுக்கு விபரமாகத் தெரிவிக்கப்பட்டது. 10—2—36 முடிவு. முதல்பரிசு ரூ. 300 சரியானவிடை 10. தலா 30 ரூ வீதம் 1 தவறுள்ள விடை 406. இரண்டாம் பரிசு ரூ 200. தலா 0—8—0 வீதம் (லேபில்கள்) சுலபமான எடு கொடு போட்டி, சித்திரப்போட்டியையும் எதிர்பாருங்கள்.

மானேஜர், வி. கே. கே. பண்டிட் நிலையம்,
ஆலூர், திருவண்ணாமலை. N. A.

புது உலகம்.

சந்தா உள் நாடு ரூ. 1—8—0
வெளி நாடு 2 வெள்ளி

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு உள்நாட்டுக்கு ரூ 6ம் வெளிநாட்டுக்கு ரூ 12ம் டிபாசிட்டுக் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

விபரங்கட்கு எழுதுக:- "புது உலகம்" ஆபீஸ்,
ஜார்ஜ்டவுன், சென்னை.

செய்தித் திரட்டு.

ஹைதராபாத் சமஸ்தானத்தில் கல்வி இலாகாவிலும், வைத்திய இலாகாவிலும் மட்டுமே இதுவரை பெண்களுக்கு உத்தியோகம் கொடுக்கப்பட்டுவந்தது. ஆனால் இப்போது முதல்தடவையாக 'வெளிவரவுக்கமிட்டியில்' உதவிக் காரியதரிசியாக கவியரசி ஸ்ரீமதி சரோஜனியின் குமாரத்தி லீலாமணி நியமிக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது

... ...

நியூ கினியாவைச்சேர்ந்த மேட்டுப்பிரதேசத்தில்வாழும் சுதேசமக்கள் ஆடுமாடுகளை விலைக்குவாங்குவதுபோல் மனைவியையும் விலைக்கு வாங்குகிறார்கள். அங்கு ஒரு மனைவிக்கு ஒரு ஷில்லிங்தான் விலையாம். சிப்பிகளை அவர்கள் நாணயங்களாக உபயோகிக்கிறார்களாம். ஒரு சிப்பி ஒரு ஷில்லிங் மதிப்புள்ளதாம். ஆகையால் ஒரு சிப்பிக்கு ஒரு மனைவி கிடைக்கிறதாம்.

....

அமெரிக்காவில் ஆட்டோ இர்ரோ கம்பெனியார் ஒரு பறக்கும் மோட்டார் செய்துவருகிறார்களாம். ஒரு சலூன் கார் அளவே அது இருக்கிறது. மேலே காற்றாடி இருக்கிறது. வேண்டாதபோது மடக்கி விடலாமாம். ரோட்டில் பிரயாணம் செய்யவும் ஆகாயத்தில் விமானமாகப் பறக்கவும் சாத்தியமாயிருக்கிறதாம்.

... ...

பிரிட்டனில் வருடந்தோறும் 40,000 இளம்பெண்கள் காணாமற்போகிறார்களாம். இவர்களனைவரும் வியபசாரத் தொழிலுக்காகவே மறைந்துவிடுகிறார்களாம்.

... ...

ஸ்ரீமதி தாராபாய் போன்ற பலமும், வீரமும், தைரியமும் உள்ள பெண்கள் ஒரு சிலர்தான் நம் நாட்டிலிருப்பதாக நாம் இதுவரை எண்ணியிருந்தோம். ஆனால் கீழ்க்கண்ட ஓர் ஆச்சர்யச்செய்தி நம்மை சந்தோஷிக்கச் செய்கிறது.

சமீபத்தில் தேவகோட்டை சமஸ்தானத்தார் திருநெல்வேலி நெல்லையப்பர் தேவஸ்தானத்துக்கு ஒரு பெரிய ஆண் யானையை சன்மானமாக அளித்தார்களாம். அந்த யானைக்கு மாவுத்த வேலைக்கு ஸ்ரீமதி பரிபூரணத்தம்மாள் என்ற பெண் நியமிக்கப்பட்டிருக்கிறாராம். மிகுந்த தைரியத்துடன் யானையை அடக்கி நிர்வகிக்கும் சக்தி இவரிடம் இருப்பதாகச்சொல்லப்படுகிறது.

....

எரியும் தீயில் நடக்கவோ நுழையவோ அஸ்பெஸ்டாஸினால் உடைகள் தயாராகி இருக்கின்றனவாம். அவைகளை அணிந்துகொண்டு செல்வதால் தீ அவர்களை ஒன்றும் செய்வதில்லையாம்.

... ...

புடாபெஸ்ட் நகரில் டாக்டர் ஜோசப் டாலர் என்பவர் மூக்குக் கண்ணாடிகளுக்குப் பதிலாக கண்ணிலேயே கண்ணாடி சில்களை வைத்துப் பொருந்தும்படி செய்யக்கண்டுபிடித்திருக்கிறாராம். கண்களுக்குத் தக்கவாறு கண்ணாடிச் சில்களை உண்டுபண்ணிக் கொடுக்கிறாராம்.

... ...

பிரபல தமிழ் வித்வானும், நூலாசிரியரும், அறிவாளியுமான சி. ஆர். நமச்சிவாய முதலியார் மார்ச்-மீ 14-உ மைலாப்பூரிலுள்ள கடலகம் என்ற தமதில்லத்தில் காலமானார். ஒரு மாதகாலமாய் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருடைய நண்பர்கள் அவரது 60-ம் ஆண்டுவிழாவை கொண்டாட ஏற்பாடு செய்திருந்தும் அவரது நோயின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. ஸ்ரீ முதலியாரின் தமிழபிமானமும் பாண்டித்யமும் யாவராலும் போற்றிப் புகழப்படுகிறது

... ...

வாலாஜாபாத்தில் சென்ற மீ 16-உ ஒரு கோழி குஞ்சு பொரித்தது. முட்டையிலிருந்து வெளிவந்த குஞ்சுக்கு 3 கண்களும் 2 அலகுகளும் இருந்தனவாம். சிறிது நேரத்தில் குஞ்சு இறந்துவிட்டதாம். அதன் உடலை இந்துமத பாடசாலையில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்களாம்.

....

பரோடா சமஸ்தானத்திலுள்ள உவாலக் என்ற கிராமத்தில் ஒரு ஸ்திரீ ஒரே சமயத்தில் 7 குழந்தைகளைப்பெற்

ருளாம். அவைகளில் 5 ஆணும் 2 பெண்ணுமாம். தாயும் குழந்தைகளும் சௌக்கியமாயிருக்கிறார்களாம்.

... ...

இந்தியாவிலிருந்து மற்றெல்லா தேசங்களுக்கும் ஆகாய விமான கார்டு கட்டணம் அணா 4 தானும்.

... ...

அமெரிக்காவின் மிகச்சிறந்த அழகியாகக் கருதப்படும் மிஸ் ஹென்றியட்டா லீவர் எனும் பெண்ணின் உருவத்தை ஒரு சிற்பி நிர்வாணமாகச்செய்து காட்சியில் வைத்தானும். அதைக்கண்ட அப்பெண் கோபித்து தனக்கது அவமானத்தைத்தரத்தக்கதென்றும், அச்சிலைக்கு உடுப்பு போடுமாறு வற்புறுத்தினளாம். ஆனல் அச்சிற்பி அதை ஆக்ஷேபித்து தன் தொழில் முறையில் எவ்வித உருவமும் செய்ய தனக்கு உரிமையுண்டென்றும் வாதாடினனும். இவ்விவகாரத்தைத் தீர்ப்பதற்காக சிற்பிகளும், சித்திரக்காரர்களும் சேர்ந்த ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறதாம். மேற்குறித்த இப் பெண்ணே சென்றவருட அழகுப் போட்டியில் பரிசு பெற்றவளாம்.

... ...

சென்னை சர்க்கார் பிரதமமந்திரி கனம் பொப்பிலி ராஜா அவர்கள் தனது மனைவியின் தேக அசௌக்கியம் காரணமாக தன் உத்தியோகத்தை ராஜீனமாச் செய்துவிட்டு இம் மாதம் 4 உ சீமைக்குப் புறப்பட்டுவிட்டார். திரும்பிவந்ததும் பார்லிமெண்டரி நியதிப்படி பழய உத்தியோகத்திலே நியமிக்கப்படுவாராம். ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் திரும்புவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-

உடுமலை K. S. ராமனத அய்யர், ஹோட்டல், பழனி.
சென்ட்ரல் லஞ்ச் ஹோம், பழனி.

ஏஜண்டுகள் தேவை

"ஜகன் மோகினி"

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்.

13-வது ஆண்டு | மாதாந்த நாவல் சஞ்சிகை. | ஜனவரி 1936

இந்த ஆண்டில், அநேக அநுபவ நீதி சாரங்களுடன் கூடிய இன்பஜோதி அல்லது பிள்ளை வீட்டாரின் கொள்ளை என்னும் நவரஸந்ததும்பிய துப்பறியும் நாவலாரம்பமாகிறது

வருஷசந்தா ரூ 1-8-0. | ஜீவிய சந்தா ரூ. 25. | தனிப்பிரதி அணா 2.

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனம்!

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனமாக அளிக்கப்படும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

"செங்குந்த மித்திரன்"

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு.)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அனுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.
உள்நாடு ரூ. 1—8—0.
வெளிநாடு ரூ. 2—0—0.

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
138, பவளக்காரத்தெரு, சென்னை.

தென் இந்தியா

மோட்டார் பாடசாலை.

(1916ல் ஸ்தாபிக்கப்பட்டது)

3மாதத்தில் மோட்டார் ஓட்டக் கற்றுக்கொள்ளலாம்.

மோட்டார் வண்டிகளை ஓட்டவும், மெஷின்களைக் கழற்றவும், பூட்டவும், எலக்டிரிக் வேலைகளையும், மலைப்பிரதேசங்களில் கார்களை ஓட்டவும், வேறு பல சீர்திருத்தங்களை செய்யவும், கற்றுக்கொடுத்து தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்டு லைசன்சும், பாடசாலை சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும். வாசிப்பு இல்லாதவர்களுக்கும் சுலபமாய் கற்றுக்கொடுக்கப்படும்.

தேர்ச்சிபெற்றால் ரூ. 35 முதல் ரு. 100 வரையிலும் பெறலாம். மோட்டார் மெக்கானிக் தமிழ் புத்தகம் 50 படம் 200 பக்கம் விலை ரூ. 2.

தபால் செலவு வேறு. விபரத்துக்கு எழுதவும்.

தென் இந்திய மோட்டார் எஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்
& பாடசாலை, மயிலாப்பூர் P. O., சென்னை.

கீழ்கண்ட விலாசத்திலும் கிடைக்கும்:—

மானேஜர், "சித்தன்" காரியாலயம், பழனி.

"லக்ஷ்மி"

ஓர் நவீன மாதப் பத்திரிகை.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யம், விகடம், செய்தித்துணுக்குகள், முதலியன நிறைந்தது. எளிய செந்தமிழ். அழகிய அட்டையுடன் கூடியது. அதிகப் பக்கம். குறைந்த சந்தா, ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டியது.

சந்தா. உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ,, 1—8—0.

விபரங்கட்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ்,
திருநெல்வேலி ஜங்ஷன்

படக்காக்ஷிக்கு வருமா?

"பத்மினி" அல்லது சித்தூர்ராணி.

புராண, இதிகாச படங்களைப் பார்த்து சலித்துப்போன தமிழ் மக்களுக்கு, திடுக்கிடும் சம்பவங்களும், சீர்திருத்த கொள்கைகளும், உணர்ச்சிமிகுந்ததுமான நாவல் கதைகளும், சரித்திரசம்பந்தமான கதைகளும் தேவையிருப்பதின் அவசியத்தை எண்ணி, பத்மனி அல்லது சித்தூர்முற்றுகை என்ற கதையை படக்காக்ஷிக்கேற்றவாறு நாடகமாகத் தயாரித்துவருகிறேன். படக்காக்ஷி தயாரிக்கும் அன்பர்கள் இதை ஏற்றுக்கொள்ள பிரியமிருப்பின் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே தெரிவித்துவிடவேண்டும்.

மு. கா. அம்பலவாணன்,
சமஸ்தான வித்வான்,
இடையகோட்டை.

நீங்கள் சந்தாதாரராக சேர்ந்துவிட்டீர்களா?

குறைந்தசந்தா! **ஜீவமணி** நிறைந்த செய்திகள்!

ஓர் உயரிய மாதப்பதிப்பென எல்லோராலும் புகழப்படுவது.

இதில் தமிழ்நாட்டிலுள்ள சிறந்த ஆசிரியர்களால் உணர்ச்சி ததும்பும் சிறு கதைகளும், ஹாஸ்யக் கட்டுரைகளும் எழுதப்படுகின்றன. இன்னும், பாரபக்ஷமின்றி எழுதப்படும் அரசியல் வியாசங்கள், சினிமா விமர்சனங்கள், உலக அதிசயங்கள், மாதர்களுக்கென சீரிய கருத்தமைந்த மாதர்பகுதிகள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன.

மார்ச்சு மாதத்திலிருந்து "ஜெயமணி" என்ற சமூக சம்பந்தமான துப்பறியும் தொடர் நாவல் ஆரம்பமாகிறது.

குறிப்பு:— மாதிரிக் காப்பி இனாம். எல்லா ஊர்களிலும் ஜீவமணியை விற்பனைசெய்ய ஏஜன்சி தேவை.

உள்நாடு வருட சந்தா 0—12—0.
வெளிநாடு ,, ,, 1—8—0.

மானேஜர்.
ஜீவமணி.
பெரியகடை, திருச்சி.

ஒற்றுமை.

(உயரிய மாத வெளியீடு.)

அரிய கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யத் திரட்டு. உலக விநோதங்கள் விமர்சனங்கள் முதலியன நிறைந்தது. சித்திர சகிதமானது. 13ம் ஆண்டு நடக்கிறது. இன்றே சந்தாதாரராய் சேருங்கள்.

மாதிரி பிரதி இனாம்.

வருடசந்தா

உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.

மானேஜர், 'ஒற்றுமை' சைதாப்பேட்டை, சென்னை.

தமிழ் பிரம சூத்திராசிரியர்,

கோவிற்பட்டி,

சாமி விருதை, சிவஞான யோகிகளால்

இயற்றப்பட்ட கீழ்க்கண்ட புஸ்தகங்கள்:-

சிவஞான போத வினாவிடை.

இது தமிழ் மறையாகமங்களின் தொன்மையையும், பெருமையையும், ஆரியமறை ஆகமங்களின் பொருள் உண்மையையும் கூறும் நூல்.

விலை ரூ. 0—10—0.

தேவோபாசனா தீபம்.

இது விக்கிரகாராதனையைப்பற்றி அன்னிய மதத்தார் கொண்டிருக்கும் தப்பபிப்ராயத்தைத் திருத்தும் நூல்.

விலை ரூ. 0—8—0.

விபூதி ருத்ராக்ஷ தாரண நிரூபணம்.

விலை ரூ 0—14—0.

N. B:-வேண்டியவர்கள் புஸ்தகக் கிரயத்தோடு தபால் செலவு 0—2—0 சேர்த்து ஸ்டாம்பாக அனுப்பலாம்.

கிடைக்குமிடம்:- மானேஜர்,

சித்தன் காரியாலயம், பழனி S. I

ஸ்ரீ கேசரி.

ஓர் சிறந்த மாதாந்தரப் பத்திரிகை.

நவரசம் ததும்பும் கதைகள், செந்தமிழ் கவிநயபாக்கள், சினிமா விமர்சனங்கள், உயரிய சீர்திருத்தக் கட்டுரைகள், ஆசிரியர் குறிப்புகள், ஹாஸ்யத் துணுக்குகள் நிறைந்தது. அழகிய ஆர்ட் காகிதரேப்பரும், வசீகர முகப்பு படங்களும் கொண்டது.

வருடசந்தா ரூ. 1—0—0

கேசரி, கோயமுத்தூர்.

"லோகோபகாரி".

பழமையும், புதுமையும் கொண்ட

வாரப்பத்திரிகை.

42-ம் ஆண்டு நடக்கிறது.

இனிய கதைகள், தேசீய பாடல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், உலக அதிசயங்கள் முதலியன கொண்டு இனிய எளிய செந்தமிழில் எழுதப்பட்ட செய்தித் துணுக்குகள் பொதிந்து வெளிவருகின்றன.

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

வருட சந்தா ரூ. 4—0—0.

"லோகோபகாரி,"

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

"தாருல் இஸ்லாம்."

10-ம் ஆண்டு நடக்கிறது.

இஸ்லாம் மதத்தின் உயரிய கொள்கைகள், நபிநாயகத்தின் திருவாக்கியங்கள், மத ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஹாஸ்யத்துணுக்குகள், தொடர் கதை முதலியன நிறைந்து வெளிவரும் சிறந்த மாதப் பத்திரிகை.

சந்தா உள்நாடு ரூ. 2—0—0.

" வெளிநாடு ரூ. 2—8—0.

கிடைக்குமிடம்:- மானேஜர், தாருல் இஸ்லாம்,

20-ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

ஸ்ரீ பாஹ் ஹோட்டல்.

ஸ்ரீபாஹ், சென்னை சிந்தாத்திரிப்பேட்டை நேப்பியர் பார்க்கில் அமைந்துள்ளது. ஆரோக்யமான கடல் காற்று, சுற்றிலும் அழகான நந்தவனம், விசாலமான அரைகள் முதலிய இயற்கை வசதிகளுடையது. ரயில்வே, ட்ராம்வேகளுக்கு வெகுசமீபம். சென்னை சட்ட சபை அங்கத்தினர்களும், பிரபுக்களும், கௌரவகுடும்பங்களும் தங்குமிடம். எல்லாசௌகரியங்களும் சொற்ப செலவில் அடையலாம். சுவை உள்ள உணவுகள், பரிசுத்தமான பதார்த்தங்கள். சென்னைக்குவரும் நீங்கள் ஒருமுறை ஸ்ரீ பாக்கில் தங்குங்கள்.

K. குப்புச்சாமி பிள்ளை,
புரோப்ரைட்டர்.

139030

"இந்திய கேசரி"

கொழும்பிலிருந்து வெளியாகும் ஓர் உயர்தரப் பத்திரிகை. இது ஜஸ்டிஸ் கக்ஷியின் கொள்கையைத் தழுவி, பிராமணரல்லாதாருக்காக உழைப்பதே இப் பத்திரிகையின் நோக்கம். பிராமணரல்லாதார் யாவரும் இதை வாங்கி வாசிக்கவேண்டும்.

வருட சந்தா ரூ. 3-0-0. சதம் 50.

மானேஜர்,
"இந்திய கேசரி",
தபால்பெட்டி, 362, கொழும்பு.

வியாபாரவிர்த்திக்கு 'சித்தனில்' விளம்பரம்செய்க

விடுதலை! விடுதலை!!

பறையருக்கும் இங்குதீய
புலையருக்கும் விடுதலை.

"விடுதலை".

ஓர் உயரிய வாரமிருமுறை தமிழ் பத்திரிகை.

சமூக, மத, அரசியல் துறைகளில் பாரத மக்களின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் போராடும் பத்திரிகை இஃதொன்றே.

ஒவ்வொரு சமூகத்துக்கும் இன்று அத்யாவசியமானவை எவை? சம நீதி, சமஅந்தஸ்து, ஐக்யம், உண்மை ஜனநாயகம் அரசியல் விடுதலை, பொருளாதார உயர்வு இத்தகைய உயர்ந்த லட்சியங்களில் ஆர்வம் உள்ள ஒவ்வொருவரும் விடுதலையைப்படிக்க வேண்டியதவசியம். இன்றே சந்தாதாரராய் சேருங்கள். விபரங்களுக்கு எழுதவும்.

கௌரவ காரியதரிசி,
"விடுதலை"
14, மவுண்ட் ரோடு, சென்னை.

Regd. No. M. 3210.

வாலிபம் பெற

மன்மதக் குளிகை

உபயோகியுங்கள்!

கலவியில் இன்பம் கொடுக்கும்.

எதிர்பாராத
தேகபுஷ்டி, போகசக்தி, வீரியவிர்த்தி
அடைவது திண்ணம்.



என்றுமிராத
தைரியம், மனோற்சாகம், ஆரோக்கியம்
பெறுவது நிச்சயம்.

சரீரத்துக்கு வலுவைக்கொடுத்து,
ஆண்மையை அதிகப்படுத்தி, இரத்தத்தை
சுத்திகரித்து, தாதுவிர்த்தியையும்,
திடகாத்திரத்தையும் தரும்.

20 குளிகை விலை ரூ. 2. 60-குளிகை ரூ. 5.

Malayappasami Vaidyasala,
PALNI. S.I.

நித்தியானந்த பிரஸ், பழனி.

ரம்செய்க

Edited, Printed & Published by Dr. C.
at the Nityananda Press, Palni